மாலை தீப்பொறி
MALAE THEEPORI
2026 அக்டோபர் 16-31 தொகுதி 25 இதழ் 6
விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# இரண்டாம் கொடிப் போராட்டம்








# களப்போராளிகளும் காகிதப்புலியும்

தலைநகர் டில்லியில், 10.10.2026 அன்று ஜந்தர் மந்தரில், "வாக்குத் திருடர் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாகப் பதவி விலக வேண்டும்" என்று வலியுறுத்தி, அமைதியான மாபெரும் மக்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பீதியடைந்த மோடி அரசு ஜந்தர் மந்தரைச் சுற்றி மூடியது. டெல்லியையே துணை ராணுவப் படைகளின் பாசறையாகவும், காவல்துறை முகாமாகவும் மாற்றியது. நடைமுறையில் டெல்லி மக்கள் மீது பந்த் - முழு அடைப்பைத் திணித்தது. ஆனாலும், இன்றைக்கு டெல்லியில் நடைபெற்ற போராட்ட நிகழ்வுகள் மோடி - ஷா அரசின் அதிகார பலத்தை மீறி, மக்களின் வெல்லற்கரிய போராட்ட உணர்வையும் அசைக்க முடியாத உறுதியையும் பறைசாற்றுவதாக இருந்தன.

அகில இந்திய மாணவர் கழகத் (AISA) தலைவர்களான தோழர்கள் நேஹா, டேனிஷ், அஞ்சலி, தனஞ்சய், பிரசன்ஜித், புகழ்பெற்ற பொதுநல வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண், சமூக செயற்பாட்டாளர் யோகேந்திர யாதவ், பேராசிரியர் அதுல் சூத், மனித உரிமைப் போராளி நவ்ஷரன் கவுர் உள்ளிட்ட நாங்கள் சிலபேர் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கு (AIIMS) அருகில் ஒன்றுகூடி இணைந்து அங்கிருந்து பேரணியாகச் சென்றோம்.

காவல்துறையின் முதல் தடுப்பரணை மீறி முன்னேறி, சஃப்தர்ஜங் மேம்பாலத்தில் உள்ள ஜோர் பாக் சந்திப்புக்கு அருகில் சென்றபோது, அங்கு தோழர்கள் நேஹா, இகக(மாலெ) டெல்லி செயலாளர் ரவி ராய், யோகேந்திர யாதவ் மற்றும் பல போராட்டக்காரர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

மற்றொருபுறம் ஜந்தர் மந்தரை ஒட்டிய பகுதிகளிலும் போராட்டக்காரர்கள் ஒன்றுகூடத் தொடங்கினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மத்தியக் குழு உறுப்பினர்கள் பலரும், டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், மேற்கு வங்கத்தின் முன்னாள் முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆகியோர் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டனர். இகக அலுவலகமான அஜய் பவன் அருகில் AISF- AIYF தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (CJP) தலைவர்களான அபிஜீத் தீப்கே, ஆஷுதோஷ் ரங்கா, சவுரவ் தாஸ் ஆகியோர் விமானத்திலிருந்து வெளியே வருவதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் விமானத்திலேயே கைது செய்யப்பட்டு தடுத்துநிறுத்தப்பட்டனர். இப்போது போராட்டத்தின் இரு தரப்புகளும் தெள்ளத் தெளிவாக வெளிப்பட்டன.

மக்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசிடம் எஞ்சியிருப்பது அரசின் குரூரமான அதிகார பலம் மட்டுமே! வழக்கமான அதன் அரசியல் கதையாடலும், அரசுக் கட்டமைப்புகளைக் கைப்பற்றும் உத்தியும் முற்றிலுமாக அம்பலப்பட்டுவிட்டன.

மறுபுறம், ஜனநாயகம் விற்பனைக்கானதல்ல; அதைச் சிதைக்கவும் அழிக்கவும் மோடி அரசை அனுமதிக்க மாட்டோம் என்ற தெளிவான செய்தியுடன் மென்மேலும் மக்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து வருகின்றனர்.

இந்தச் செய்தி இன்னும் மோடியின் டெலிப்ராம்ப்டரில் இடம்பெறாமல் இருக்கலாம். ஆனால், உண்மையைப் படித்துப் புரிந்துகொள்ள விரும்புவோருக்கு, வரப்போகும் அரசியல் மாற்றத்தைச் சுட்டிக்காட்டும் அறிகுறிகள் சுவரில் தெளிவாக எழுதப்பட்டுவிட்டன!

11.10.2026

**திபங்கர்**
பொதுச் செயலாளர்
இகக(மாலெ)விடுதலை

மாலெ தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
2026 அக்டோபர் 16-31
தொகுதி 25 இதழ் 6

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர், சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# தவெக அரசின் கலாச்சாரமும் காவல்துறை அராஜகமும்

வருகிற குழந்தைகள் தினத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் 61.84 லட்சம் குழந்தைகளுக்கு தமிழ்நாடு முதல்வர் கேக் கொடுக்கச் சொல்லியுள்ளாராம். அதற்காக ரூ.9.27 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பற்றி தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ் மோகன் ஒரு கூட்டத்தில் பெருமையாகப் பேசுகிறார். சாக்லேட் கேக் கொடு, தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியாகக் கொடு என்றாராம் விஜய். கேக் கொடுக்கும் போது அதில் முதல்வர் பெயர் ஸ்டிக்கர் கூடாது, எனக்கு விளம்பரம் வேண்டாம், குழந்தைகளுக்கு கேக் போனா போதும் என்று சொல்லிவிட்டாராம். யாருக்கு இந்த மனசு வரும்...? உண்மையிலேயே காந்தி கண்ட கனவை நனவாக்குவதற்கும் இன்றைய இளைய தலைமுறையை ஒரு நல்ல பாதைக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது என்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். விஜய் அவருடைய சொந்தப் பணத்திலிருந்து ஒன்பது கோடி ரூபாய் செலவு செய்வதுபோல் அமைச்சர் பேசுகிறார். காந்தி குழந்தைகளுக்கு கேக் கொடுக்க எப்போது சொன்னாரோ? தவெக அமைச்சர்களும் எம்எல்ஏக்களும் மாவட்ட, வட்டச் செயலாளர்களும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று முதல்வர் விஜய் படத்தை மாட்ட வேண்டும், விஜய் நடித்த படத்தையும் பாட்டையும் போட்டு ஆட வேண்டும், விஜய் போல் மாணவர்கள் செய்கை செய்ய வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொடுப்பதுதான் இன்றைய இளைஞர்களுக்கு இவர்கள் காட்டும் நல்ல பாதை போலும்.

பள்ளி, கல்லூரிகளை மேம்படுத்த, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப, தேர்தல் வாக்குறுதியில் சொன்னதுபோல் ஆசிரியரை, செவிலியரை, ஊழியரைப் பணிநிரந்தம் செய்ய எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாமல், கஜானா காலியாக இருக்கு என்று சொன்ன இந்த விஜய் அரசு வேண்டாத திட்டங்களுக்கு வீணாகச் செலவு செய்து கொண்டிருக்கிறது. விஜய், திட்டங்களைத் தொடங்கி வைக்கச் செல்லும் இடமெங்கும் பல கி.மீ நீளத்திற்கு தடுப்புகள், தவெக கட்சிக் கொடி, விளம்பரங்கள் எல்லாம் அரசாங்க செலவில். ஆனால், அரிசி, பருப்பு, சீனி, வெங்காயம் என அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மக்கள் கைகளுக்கு எட்டாமல் பறந்து கொண்டிருக்கின்றன. அது பற்றிய எவ்விதக் கவலையும் இல்லை ஆட்சியாளர்களுக்கு. தனியார் நிறுவனம் கொள்ளையடிக்க, யூனிட் ரூ.35க்கு மின்சாரத்தை வாங்குகிறது இந்த தவெக அரசு.

இன்னொருபுறம் காவல்துறையின் அராஜகக் கெடுபிடிகள் வேறு. 'தாய் மாமன்' மதுரைக்குச் சென்றபோது, பள்ளிக் குழந்தைகளும் பெண்களும் இளைஞர்களும் வெயிலில் காத்துக் கிடந்து மயங்கி விழுந்தார்கள். விழா இடத்திற்கு அழைத்துவரப்பட்ட குழந்தைகளிடத்தில் கடும் பாதுகாப்புச் சோதனைகள். வாக்குத் திருடர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி, மோடி–ஷாவுக்கு எதிராக நாடெங்கும் மாணவர், இளைஞர் போராட்டம் நடக்கும்போது, டெல்லியில் மெட்ரோ ரயில்களை எல்லாம் முடக்கி வைத்துவிட்டு, எதுவுமே நடக்காதது போல், தமிழ்நாட்டிற்கு வந்து மெட்ரோ ரயில் ஓட்டத்தைத் துவக்கி வைத்த மோடியை வரவேற்க, நூற்றுக்கணக்கான பள்ளிக் குழந்தைகளை அலங்கரித்து அழைத்து வந்து, உணவு, தண்ணீர் கொடுக்காமல் அக்னி வெயிலில் காத்துக் கிடக்கச் செய்துள்ளனர்.

தமிழ்நாட்டுப் பெண்களுக்கு அண்ணனாகவும், அவர்கள் குழந்தைகளுக்குத் தாய்மாமனாகவும் வளைகாப்பு நடத்துவது, தங்க மோதிரம் போடுவது எல்லாம் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து. தமிழ்நாட்டு சகோதரியை கர்நாடகாவிற்கோ, கேரளாவிற்கோ கட்டிக் கொடுத்துவிட்டு அவர் தாய்வீட்டுக்கு வந்து குழந்தை பெற்றுக் கொண்டால், அந்தக் குழந்தைக்கு இந்த விஜய் மாமாவின் அரசு மோதிரம் போடாதாம். மோதிரம் யாருக்குக் கிடைக்கிறதோ இல்லையோ இந்தத் திட்டங்களால் ஜாய் அலுகாஸ்ஸூம், கல்யாண் ஜுவெல்லர்ஸ்ஸூம்

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

# திமாகி நக்சல் பீதியும் தொடரும் பழிவாங்கும் வேட்டையும்!

கற்பிதம் செய்யப்பட்ட உள்நாட்டு எதிரிகளுக்கு எதிராகப் பொதுமக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களைத் தூண்டிவிடுவதற்கு கவர்ச்சியான சொற்பதங்களை உருவாக்கும் கலையில் மோடி அரசாங்கமும் சங்கிக் கும்பலின் தகவல் தொழில்நுட்பப் பிரிவும் மோடியின் அடிவருடி ஊடகங்களும் பல ஆண்டுகளாக நிபுணத்துவம் பெற்றிருப்பதாகவே தோன்றியது. 'துக்டே துக்டே கேங்' (பிரிவினைவாதிகள்) முதல் 'அர்பன் நக்சல்' (நகர்ப்புற நக்சல்) வரை, தேசவிரோதி முதல் ஆந்தோலன்ஜீவி (போராட்ட பிழைப்புவாதி) வரை — அவர்கள் ஒரு புதிய சொல்லை உருவாக்கினால் போதும்; ஊடகங்களும் பொதுப்புத்தியும் அதை பேரார்வத்துடன் ஏற்றுக்கொள்வது போல் தோன்றியது. ஆனால் காலங்கள் மாறிவிட்டன. வேலையில்லா இளைஞர்களைக் குறிக்கும் வகையில் கரப்பான்பூச்சி என்ற சொல்லை தலைமை நீதிபதி பயன்படுத்தினார். பின்னர், போலிப் பட்டம் பெற்ற வழக்கறிஞர்களை மட்டுமே மனதில் கொண்டு அவ்வாறு குறிப்பிட்டதாக அவர் 'விளக்கமளித்தாலும்', அது கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் எதிர்வினையை மட்டுமே வரவழைத்தது. இந்திய இளைஞர்களை இழிவுபடுத்தும் வசைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்ட அந்த வார்த்தையே, இந்தியாவின் முதல் 'ஜென் ஷீ' எதிர்ப்புக் கொண்டாட்டத்திற்கு வித்திட்டது. தற்போது திமாகி நக்சல் (அறிவார்ந்த நக்சல்) என்ற சொல்லாக்கமும் அதேபோன்று பின்னடைவைச் சந்தித்து வருகிறது.

கோபமுற்று கிளர்ந்தெழும் இந்திய இளைஞர்களை அச்சுறுத்துவதற்குப் பதிலாக, திமாகி நக்சல் என்ற முத்திரை, 'கரப்பான்பூச்சி' என்ற சொல்லுக்குக் கிடைத்ததைப் போன்ற எதிர்வினையையே தூண்டியது. குறுகிய காலத்திலேயே, "சிந்தித்திடு, ஆராய்ந்திடு, எதிர்த்திடு" என்ற முழக்கத்துடன் 'திமாகி நக்சல் கட்சி' என்ற பெயரில் ஒரு டிஜிட்டல் இயக்கம் உருவானதை நாம் கண்டோம். அதோடு, 'திமாகி நக்சல்' முத்திரை மரியாதையின் சின்னம் என குடிமக்களும் பெருமையுடன் பறைசாட்டுகின்றனர். அதுமட்டுமின்றி, அமித் ஷாவின் 'ஆபரேஷன் ககார்' (மாவோயிஸ்ட் ஒழிப்பு) நடவடிக்கைக்கு முன்னோடியான 'ஆபரேஷன் கிரீன்ஹன்ட்' – பசுமை வேட்டை நடவடிக்கையை முன்னெடுத்த மூத்த காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் உள்துறை அமைச்சருமான பி.சிதம்பரம் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட தங்களை திமாகி நக்சல்கள் அறிவித்துக்கொண்டனர். இந்த விவகாரத்தில் தன்னைத் தானே ஒரு முட்டுச்சந்தில் சிக்கவைத்துக்கொண்டு விளக்கமளிக்க வேண்டிய நிலைக்கு பாஜக தள்ளப்பட்டது. அவர்கள் எவ்வளவு அதிகமாக விளக்கமளிக்க முயன்றார்களோ, அவ்வளவு அதிகமாகத் தங்களது சொந்த தர்க்கப் பிழைகளின் வலைப்பின்னலில் தங்களைத் தாங்களே சிக்க வைத்துக் கொண்டனர்.

இதற்கான முதல் விளக்கமளிக்கும் முயற்சி கிரண் ரிஜிஜுவிடமிருந்து வந்தது. அரசமைப்புச் சட்டத்தின் 370–வது பிரிவையும் இந்திய வடகிழக்குப் பகுதிக்கான நுழைவாயிலாகக் கருதப்படும் சிக்கன் நெக் பகுதியை முடக்குவதன் மூலம் வடகிழக்கில் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கலாம் என்று கூறப்படும் அச்சுறுத்தலையும் குறிப்பிட்டு, திமாகி நக்சல் என்ற சொல்லாக்கத்தை விளக்க முயன்றார். அதன்பின்னர், ஆர்எஸ்எஸ்–ன் அதிகாரப்பூர்வ ஊதுகுழலான ஆர்கனைசர் இதழ், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிகால தேசிய ஆலோசனைக் குழு வரை பின்னோக்கி சென்று இந்தச் சொல்லின் வேரைத் தேடியது. ஆனால் தேசிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் எவருக்கும் 1967–ஆம் ஆண்டின் நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியுடனோ பின்னர் பரவலாக நக்சலிசம் என்று அறியப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் அரசியல் இயக்கத்துடனோ எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. மேலும் தங்களை மாவோயிஸ்ட் என்று அடையாளப்படுத்திக்கொண்ட தீவிர ஆயுதப்படை போக்குகளுடனும் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இருந்ததில்லை என சொல்ல வேண்டியதுமில்லை. எனவே, தேசிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களோ அல்லது அவர்களின் கடந்தகால அரசியல் தொடர்புகளோ பிரச்சினையாகத் தெரியவில்லை. மாறாக, தேசிய ஆலோசனைக் குழுவால் முன்மொழியப்பட்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உரிமைகள் அடிப்படையிலான நலச் சட்டங்களே பிரச்சினையின் உண்மையான இலக்காகத் தெரிகிறது.

திமாகி நக்சல் என்ற சொல்லை வரையறுக்க வேண்டிய அவசியமே இல்லை என சங்–பாஜக அமைப்பின் நன்கு அறியப்பட்ட கருத்தியல் தூதரும் அரசியல் மேலாளருமான ராம் மாதவ் நம்மிடம் கூறுகிறார். அதனை அவர் ஒரு உலகளாவிய நிகழ்வாக திசைமாற்றி, கருத்தியல் ரீதியாக, வரலாற்று ரீதியாக, மாவோ, சே குவேரா தொடங்கி, இந்தியாவில் சாரு மஜும்தார், கானு சன்யால், கானாய் சாட்டர்ஜி, நேபாளத்தில் புஷ்ப் கமல் தஹால் 'பிரசந்தா' வரையிலும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பல நன்கறியப்பட்ட தலைவர்களுடன் இணைக்கிறார். 'ஒரு குறிப்பிட்ட அளவு தெளிவின்மை ... பாதிப்பற்றதும் ரசிக்கத்தக்கதுமாகும்" என்று ராம் மாதவ் வாதிடுகிறார். ஆனால் இந்த 'ஒரு குறிப்பிட்ட அளவு தெளிவின்மை'தான் பாஜக தகவல் தொழில்நுட்ப பிரிவின் கைகளில், பரந்த அளவிலான எதிர்கருத்துடையவர்களைத் தேடித்தேடி வேட்டையாடுவதற்கான ஒரு வழிவகையாக மாறுகிறது. பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் முதல் ஆசிரியர் இயக்கத் தலைவர் நந்திதா நரேன் வரை, பல்வேறு வகையான மாற்றுக் கருத்தாளர்களுக்கும் 'திமாகி நக்சல்' தூரிகை கொண்டு வண்ணம் பூச முடிகிறது.

'பாதிப்பற்றதும் ரசிக்கத்தக்கதும்' என ராம் மாதவ் குறிப்பிடும் வகையில் இந்தச் சொல் உண்மையிலேயே விவாதிக்கப்பட்டிருந்தால், அது குறித்து இவ்வளவு பெரிய

விவாதமே எழுந்திருக்காது. செங்கோட்டையில் தான் ஆற்றிய உரையில் திமாகி நக்சல்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்துவது குறித்து மோடி பேசியிருந்தார். பாஜகவின் பல்வேறு சமூக ஊடகக் கணக்குகள் முன்னெடுத்த டிஜிட்டல் பரப்புரை இயக்கம், 'திமாகி நக்சல்களை' ஒழிப்பதற்கான வன்முறை வழி போரை சுட்டிக்காட்டும் மீம்ஸ்கள், ரீல்ஸ்களின் அதிரடித் தாக்குதலை ஏற்கனவே கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

டிஜிட்டல் தளங்களுக்குள் மட்டுமே இந்த வன்முறை சுருங்கிவிடவில்லை. ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தின் மீதான தாக்குதலிலும் மேற்கு வங்கம், ராஜஸ்தானில் நடைபெற்ற 'பள்ளியைச் சீரமைப்போம்' இயக்கங்களுக்கு எதிரான தாக்குதல்களிலும் அதன் நேரடி வன்முறை வடிவங்களை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்.

'காயமடைந்த பலசாலி'யால் தலைமை தாங்கப்படுகிற ஆட்டம்காணும் அரசாங்கத்திற்கு, திமாகி நக்சல் என்பது அறிவாளிப் பிரிவினருக்கு எதிரான தனியார் கண்காணிப்பு படைகள், சொத்துகளை சேதப்படுத்துதல், வன்முறை இயக்கத்தின் பீதியூட்டும் வேண்டுதலாக இருக்கக்கூடும்.

மோடி அரசாங்கத்திற்கும் சங் பரிவார் அமைப்பிற்கும் முன்னுள்ள ஒரு மிகப்பெரிய சவாலை ஜந்தர் மந்தர் போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுவரும் ஜென் ஷீ, ஜென் ஆல்ஃபா தலைமுறையினரின் விழிப்புணர்வும் அறுதியிடலும் உணர்த்துகின்றன. இது எந்தவொரு குறிப்பிட்ட பகுதிக்கோ அல்லது குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளுக்கோ மட்டுப்பட்ட நிகழ்வல்ல. மாறாக, வர்க்கங்கள், கலாச்சாரங்கள், தலைமுறைகளைத் தாண்டி பரந்த புவியியல் பரவலையும் சமூக ஈர்ப்பையும் இந்த நிகழ்வு கொண்டுள்ளது. இதற்கு, டிஜிட்டல் வழியில் தொடர்புகொள்ளும் இயக்கம் முதல் "ஒரு நாள், ஒரு பல்கலைக்கழகம்" என்ற திமாகி நக்சல் வேட்டைக்கான அமைச்சகப் பொறுப்புகள் வரை பன்முகப்பட்ட எதிர்வினை குறித்து பதற்றமடைந்துள்ள மோடி அரசாங்கம் சிந்தித்து வருகிறது. மிகச்சரியாக இதற்காகத்தான்,

இந்தியாவில் சங் பரிவாரின் வெறுப்பு நிறைந்த பாசிச நிகழ்ச்சி நிரலையும் அதன் மூர்க்கத்தனத்தையும் மறைக்க தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது மோகன் பகவத் ஒரு தாராளவாத, (அனைவரையும்) உள்ளடக்கிய முகமூடியை அணிய தன்னாலான சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். ஆனால் இந்திய மக்களுக்கும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கும் உலகெங்கிலும் இந்தியாவைக் கவனித்து வருபவர்களுக்கும் இப்போது போதுமான அனுபவம் கிடைத்துவிட்டது. அவர்கள் ஆர்எஸ்எஸ், பாஜகவை அவர்களின் இனிப்பு தடவப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு மதிப்பிடப் போவதில்லை; மாறாக, பத்தாண்டுகளுக்கும் மேலாக மத்தியிலும் பலப்பல பத்தாண்டுகளாக குஜராத் போன்ற மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருக்கும் சங் பரிவாரை எதிர்கொண்ட மோசமான அனுபவங்களின் அடிப்படையிலேயே மதிப்பிடுவார்கள்.

**தலையங்கம், எம்எல் அப்டேட்**
**தமிழாக்கம்: விஜி**

**தலையங்கம் தொடர்ச்சி...**

நல்லாவே கல்லாக் கட்டுகிறார்கள். கோவை வந்த முதல்வர் விஜய்யை கேரளாவிற்குக் கூட்டிச் செல்வதற்கு கல்யாண் ஜுவல்லர்ஸ்ஸின் ஹெலிகாப்டர் காத்துக் கிடக்கிறது. 'பெரியார் அறிவுலகம்' நூலகத்தைத் திறந்து வைத்த கையோடு, தனியார் நிறுவனத்தின் நவராத்திரி விழாவில் கலந்து கொள்ள திருச்சூர் புறப்பட்டார் விஜய். என்னவொரு கொள்கைப் பிடிப்பு?!

அக்டோபர் 10ம் தேதி தவெக அரசு ஒரு அரசாணை (23984/GAD) வெளியிட்டது. அதில் ஆயுத பூஜைக்கு அரசு ஊழியர்கள், அரசு அலுவலகங்கள் பொது மக்களிடம் இருந்து நிதி திரட்டக் கூடாது என்று சொல்லிவிட்டு, ஆயுத பூஜை கொண்டாடப்பட வேண்டும், பூசணிக்காய் தேங்காய் உடைத்து சாமி படங்களுக்கு பூ வைத்து அலுவலக வளாகத்தை அலங்கரித்து எளிமையாக கொண்டாட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது மதச் சார்பின்மைக்கும் அறிஞர் அண்ணா காலந்தொட்டு தமிழ்நாட்டில்ஏற்கனவேஅமலில்இருக்கும்அரசாணைக்கும் எதிரானது. 1968ல் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் பிறப்பித்த அரசு ஆணை அரசு அலுவலகங்களில் உள்ள ஆண், பெண் கடவுள் படங்களையும் ஏனைய மதம் சார்ந்த அடையாளங்களையும் படிப்படியாக அகற்ற வேண்டும் என்று கூறுகிறது. 1994ல் ஒன்றிய அரசு, அரசு மற்றும் அரசு சார் அலுவலகங்களில் எந்த மதம் சார்ந்த கோயில், சர்ச் மற்றும் மசூதி வழிபாடுகளை அனுமதிக்கக் கூடாது என்று ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. தமிழ்நாட்டில் திமுக, அதிமுக அரசுகள் மேற்படி ஆணைகளைக் கறாராக அமல்படுத்தாமல் இருந்தாலும்கூட, இப்படி வெளிப்படையாக ஆயுதபூஜை நடத்த முயற்சிக்கவில்லை. ஆனால், விஜய் அரசு அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களை இந்துமயமாக்கும் முயற்சிகளில் இறங்குவது போல் தெரிகிறது. தவெக விவசாய அமைச்சர், விவசாய நிதிநிலை அறிக்கையை, திருப்பதி சென்று பூஜை செய்து எடுத்து வந்தார்.

இப்படி ஒருபுறம் மதச் சார்பின்மைக்கு எதிராகவும் படுபிற்போக்கு, பெண்ணடிமைத்தன கலாசாரங்களை உயர்த்திப் பிடித்து செயல்பட்டுக்கொண்டிருக்கும் விஜய் அரசு, மறுபுறம் மோடி-ஷா போலீஸிற்கு இணையாக தமிழ்நாட்டு போலீஸின் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுகிறது. திமுக ஆட்சியின் போது, போராடிக் கொண்டிருந்த செவிலியர்கள் மத்தியில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், நீங்கள் அனைவரும் பணிநிரந்தரம் செய்யப்படுவீர்கள் என்றார். ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள் ஆகியும் எதுவும் நடக்கவில்லை எனப் போராடிய செவிலியர்களுக்கு கிடைத்ததோ தடியடியும் கைதும்தான். பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருக்கக்கூட அனுமதி கொடுக்காமல், குறிப்பிட்ட தேதியில் அமைதியாகக் குழுமி இருந்தவர்களை குண்டுக் கட்டாகத் தூக்கி கைது செய்து வழக்குப் போட்டுள்ளது விஜய் அரசு. இந்தியா கூட்டணியில் நாங்களும் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, ஞானேஷ்குமாரை பதவி விலகக் கோரி, ஜந்தர் மந்தர் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் போராடியவர்கள் மீது தடியடி, கைது. அடுத்து ஆர்எஸ்எஸ் ஊர்வலத்திற்கு அனுமதி தரப் போகிறது. தவெக அரசின் செயல்பாட்டில் மாற்றமில்லை ஏமாற்றமே.

# வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை (எஸ்ஐஆர்-ஐ) ரத்து செய்; இந்திய தேர்தல் ஆணையத்தை மாற்றியமை!

ஒரு எதிர்ப்புப் போராட்ட நாளாக காந்தி பிறந்தநாள் இந்த அளவிலும் இந்த வகையிலும் சுதந்திர இந்தியாவில் இதற்கு முன்பு மக்களால் ஒருபோதும் கொண்டாடப்பட்டதில்லை. ஆயுதமற்ற சாதாரண மக்களின் அமைதிவழி வெகுமக்கள் எதிர்ப்புப் போராட்ட வலிமையை உலகுக்கு உணர்த்திய ஒரு புகழ்மிகுத் தலைவராக ஒட்டுமொத்த உலகமும் காந்தியை அங்கீகரிக்கிறது. இந்த ஆண்டு அவரது 157 வது பிறந்தநாளன்று காந்தியின் அந்த மரபு இந்தியா முழுவதும் உண்மையிலேயே மீண்டும் உயிர்பெற்றது. டெல்லியின் அரணமைக்கப்பட்ட ஜந்தர் மந்தரைச் சுற்றி அச்சமூட்டும் வகையில் பாதுகாப்புப் படையினர் பெரும் எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது; அதனை மீறிச் சென்ற நூற்றுக்கணக்கான மாணவ செயற்பாட்டாளர்களும் பிற குடிமக்களும் மீண்டும் மீண்டும் கொடூரமாகக் கைது செய்யப்பட்டது; அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காவல் பேருந்துகளிலிருந்து தப்பி வெளியேறி மீண்டும் எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டது; அல்லது மும்பையில் ஒரு ஒட்டுமொத்த மக்கள் கூட்டமும் ஒரு குழுவாக தேசிய கீதத்தைப் பாடியது; இது போன்ற காட்சிகள் வரவிருக்கும் ஆண்டுகளில் நம் நினைவில் என்றும் நீங்காமல் நிலைத்திருக்கும். போராடும் மக்கள் அமைதிவழிப் போராட்டத்தின் காந்திய மரபைக் கையில் எடுத்தபோது, தற்போதைய அரசாங்கமோ மிருகத்தனமாக ஒடுக்கும் காலனித்துவ ஆட்சி முறைக்கு மீண்டும் உயிர் கொடுத்தது.

ஞானேஷ் குமார் உடனடியாகப் பதவி விலக வேண்டும், எஸ்.ஐ.ஆர் நடவடிக்கையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், தவறுதலாக நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரின் வாக்குரிமையையும் திரும்ப அளிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இப்போது இந்தியா முழுவதும் உள்ள குடிமக்கள் அணிதிரளும் புள்ளியாக மாறியுள்ளன. தனது சொந்த தேர்தல் ஆணையத்தைத் தேர்ந்தெடுக்க அன்றைய அரசாங்கத்திற்கு முழு சுதந்திரம் அளிக்கிற, தேர்தல் ஆணையர்களுக்கு வாழ்நாள் முழுவதுமான சட்டப் பாதுகாப்பை வழங்கி, அவர்களைச் சட்ட வரம்பிற்கு மேலானவர்களாக நிறுத்திய 2023 ஆம் ஆண்டின் சட்டத்தைத் திரும்பப் பெறுவதும் அவசியமாகும். இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளியான அதிரடியான புலனாய்வு அறிக்கையும் அதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையம் மேற்கொண்ட 'நெருக்கடி மேலாண்மை', 'சேதக் கட்டுப்பாட்டு' முயற்சிகளும் நீண்டகாலமாக கனன்று கொண்டிருந்த மக்களின் எதிர்ப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளன. தலைமைத் தேர்தல் ஆணையரின் தன்னிச்சையான, ஒருதலைப்பட்சமான செயல்பாடு, தேர்தல் ஆணையத்திற்குள் மற்ற ஆணையர்கள் ஓரங்கட்டப்பட்டது, எஸ்ஐஆர் மூலம் வாக்காளர் பட்டியலைச் சரிசெய்கிறோம் என்ற பெயரில் அப்பட்டமாக அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்டது, மென்பொருள் தில்லுமுல்லுகள் நடந்தது, இவையனைத்தையும் இந்தியன் எக்ஸ்பிரஸ் அறிக்கை அம்பலப்படுத்தியிருந்தது. அரசமைப்புக்கு எதிரான எஸ்ஐஆர் நடவடிக்கையின் மூலம் இந்திய தேர்தல் ஜனநாயகத்திற்கும் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படைக் கொள்கைக்கும் இழைக்கப்பட்டுள்ள மாபெரும் நிறுவனரீதியான பெரும் மோசடியை தேர்தல் ஆணையம் வெளியிடும் ஒவ்வொரு சுற்றறிக்கையும் சான்றளிக்கிறது.

13 கோடிக்கும் அதிகமான வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது குறித்து நாடு முழுவதும் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில், 'விடுபட்ட' அனைத்து வாக்காளர்களையும் ஒரு மாதத்திற்குள் தொடர்புகொள்ளுமாறு அனைத்துத் தலைமைத் தேர்தல் அதிகாரிகளையும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது! வாக்காளர்கள் பெருமளவில் நீக்கப்பட்டதன் யதார்த்தத்தைக் கண்டு தேர்தல் ஆணையம் இப்போது ஏன் விழித்துக்கொண்டது? தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலில் உள்ள 'விடுபட்ட' என்ற சொல், உண்மையில் பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்குச் சாதகமாகத் தேர்தல் முடிவுகளைத் திரிக்கும் வகையில் தன்னிச்சையாகவும் திட்டமிட்டும் வாக்காளர்களை நீக்கியதன் மறைமொழியாகும். அக்டோபர் 1 அன்று தேர்தல் ஆணையம் இந்த அண்மைய சுற்றறிக்கையை வெளியிட்டுக் கொண்டிருந்த அதே வேளையில், நீக்கப்பட்ட வாக்காளர்கள் குறித்து மக்கள் விசாரணை ஒன்றை சிபிஐ(எம்எல்) தோழர்கள் பாட்னாவில் நடத்திக் கொண்டிருந்தனர். 2025 பீகார் சட்டமன்றத் தேர்தலில் கட்சி போட்டியிட்ட இருபதில், பத்து தொகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது வாக்குச்சாவடிகளில், ஜூன் முதல் செப்டம்பர் வரை வீடு வீடாகச் சென்று சரிபார்க்கும் ஒரு கணக்கெடுப்பைக் கட்சி தோழர்கள் மேற்கொண்டனர்; அதாவது, இப்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை இந்திய தேர்தல் ஆணையம் செய்யச் சொல்லிக் கேட்கும் அதே வேலையைத்தான் அவர்கள் செய்தார்கள் - எஸ்ஐஆர்-க்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலை எஸ்ஐஆர்-க்கு முந்தைய ஜூன் 2025 பட்டியலுடன் ஒப்பிட்டு நீக்கப்பட்ட வாக்காளர்களின் கண்டறிதலைச் செய்தார்கள். அதிர்ச்சியூட்டும் 17 சதவீதம் அளவுக்கு வாக்காளர்கள் தவறான முறையில் நீக்கப்பட்டிருப்பதை இந்தக் கணக்கெடுப்பு வெளிப்படுத்தியது.

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்களைப்

பெருமளவில் நீக்குவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை சேர்ப்பதற்கும் படிவம் 6, படிவம் 7 ஆகியவற்றை பாஜகவும் இந்தியத் தேர்தல் ஆணையமும் ஆயுதமாக்கியுள்ளன. படிவத்தின் விதிகளில் ஏதேனும் மாற்றங்களைச் செய்வது நாடாளுமன்றத்தின் தனிப்பட்ட உரிமையாகும்; எனவே, படிவம் 6-ல் செய்யப்பட்ட மாற்றங்கள் தன்னிச்சையானவை, அங்கீகாரமற்றவை, சட்டவிரோதமானவை என அம்பலமாகியுள்ளன. ஆனால், எந்த விளக்கமும் அளிக்காமல் அந்த சர்ச்சைக்குரிய விதிகளைத் தேர்தல் ஆணையம் திரும்பப் பெற்றுள்ளது. படிவம் 6-ல் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல் இருப்பதாகக் கூறும் தேர்தல் ஆணையத்தின் முயற்சி, இப்போது தலைமை நீதிபதி சூர்யகாந்த்-தாலேயே மறுக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் 'ஜென் ஷீ' வாக்காளர்கள் சேர்க்கப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது தெளிவாகிறது. முதன்முறை வாக்களிப்பவர்களை சட்டப்பூர்வமாகச் சரிபார்க்கக்கூடிய உறுதிமொழியுடன் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான வழியே படிவம் 6 ஆகும். நீக்கப்பட்ட வாக்காளர்கள் மீண்டும் வாக்காளர் பட்டியலில் இணைவதற்காக படிவம் 6-ஐ நிரப்புமாறு கட்டாயப்படுத்தியதன் மூலம் இந்திய தேர்தல் ஆணையம் அதனை தவறாகவும் கூட பயன்படுத்துகிறது. இது அப்பட்டமான சட்டவிரோதமாகும்; முதல் நாளிலிருந்தே எதிர்ப்பு இருந்தபோதிலும் தேர்தல் ஆணையம் இந்த முறைகேட்டைத் தொடர்ந்து செய்து வருகிறது.

தகுதியான வாக்காளர்களை நீக்குவதற்காகப் படிவம் 7-ஐ பெருமளவில் தவறாகப் பயன்படுத்தியது இதைவிடக் கொடூரமானதாகும். பெரும்பாலும் இஸ்லாமிய வாக்காளர்களையும் பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு எதிராக வாக்களிக்கும் வாய்ப்புள்ள வாக்காளர்களையும் குறிவைத்து, முன்னதாகவே நிரப்பப்பட்ட படிவம் 7-களின் கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாகப் பல செய்திகள் வெளிவந்துள்ளன. படிவம் 7-இன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட புகார்கள் மீதான நடவடிக்கையாக வாக்காளர்கள் நீக்கப்படும் ஒவ்வொரு வழக்கிலும் சம்பந்தப்பட்ட நீக்கப்படும் வாக்காளர்களுக்கு முறையான அறிவிப்புகளும் அவற்றுக்குப் பதிலளிப்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். ஆனால், பெருமளவிலான பெயர் நீக்கத்திற்குப் பலியான வாக்காளர்களின் அனுபவம் இதுவாக இல்லை. அதிர்ச்சியூட்டும் வகையில் குறிவைத்துப் பெயர் நீக்கும் நடவடிக்கைகள் மேற்கு வங்கத்தில்தான் அரங்கேறியுள்ளன. நீதித்துறை அதிகாரிகளால் கூட தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்ட வாக்காளர்களை நீக்கக் கோரி, மேற்கு வங்கத்தின் கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரியே 2.54 லட்சம் எண்ணிக்கையிலான படிவம் 7 மேல்முறையீடுகளைத் தமது தீர்ப்பாயத்தின் முன் தாக்கல் செய்தார் என, இப்போது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் 11-ன் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி இந்திரஜித் சாட்டர்ஜி வெளிப்படுத்தியுள்ளார். இந்தியன் எக்ஸ்பிரஸ் புலனாய்வு அறிக்கையின்படி, மேற்கு வங்கத்தில் உள்ள 19 தீர்ப்பாயங்களுக்கு முன்னால் உள்ள 16,10,311 வாக்காளர் நீக்க மேல்முறையீடுகள் எப்படி வந்தன என்பது குறித்து அல்லது அதற்கான அங்கீகாரம் குறித்துத் தனக்கோ, அல்லது சக தேர்தல் ஆணையரான விவேக் ஜோஷிக்கோ அல்லது மேற்கு வங்கத் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கோ எந்தவொரு விவரமும் தெரியாது என்று தேர்தல் ஆணையர் சுக்பீர் சிங் சாந்து புகார் அளித்திருந்தார்.

காலனித்துவத்திற்குப் பிந்தைய இந்தியாவில் ஜனநாயகம் நிலைத்திருப்பதற்கு மையமாக விளங்கிய இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அதிகாரத்தைப் பிரித்தளிக்கும் கோட்பாடு, பரஸ்பரக் கட்டுப்படுத்தலும் அதிகாரச் சமநிலையும் கொண்ட அமைப்புமுறை ஆகியன தற்போது மிகக் கடுமையான சோதனையை எதிர்கொண்டுள்ளன. தேர்தல் ஆணையத்தைக் கட்டுப்படுத்தி இருக்கக் கூடிய, கட்டுப்படுத்தி இருக்க வேண்டிய உச்ச நீதிமன்றம், இந்த மாபெரும் தேர்தல் மோசடியைச் செய்வதற்கு தேர்தல் ஆணையத்திற்கு கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை வழங்கியிருந்தது. 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாக்களை ஆய்வு செய்யும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையில் அக்டோபர் 6 ஆம் தேதி திட்டமிடப்பட்டிருந்த சந்திப்பு, சட்டமியற்றும்துறை-நீதித்துறையின் எல்லைகளை நீர்த்துப்போகச் செய்யும் ஒரு அதிர்ச்சியூட்டும் நிகழ்வாக அமைந்திருக்கக்கூடும்; நல்லவேளையாக அது இப்போது கைவிடப்பட்டுள்ளது. இந்திய ஜனநாயகம் நிலைத்திருப்பதற்கு நிறுவனரீதியான ஆதரவு மிகக் குறைவாகவே உள்ளது. இந்நிலையில், இந்திய மக்களின் முதிர்ச்சியையும் விழிப்புணர்வையும்,

இந்த நெருக்கடியான தருணத்தில் அவர்கள் நம்பியிருக்கக்கூடிய பாஜக-அல்லாத அரசியல் அமைப்புகள், சிவில் சமூகங்கள், மாற்று ஊடகங்களையுமே இந்திய ஜனநாயகத்தின் இருத்தல் தற்போது கிட்டத்தட்ட முழுமையாக சார்ந்துள்ளது. சற்றே தாமதமாக நடந்த இந்தியா கூட்டணியின் செப்டம்பர் 30 ஆம் தேதி கூட்டமும் இடதுசாரி மாணவர் செயற்பாட்டாளர்கள், பிற ஜென் ஷீ போராட்டக்காரர்கள், முற்போக்கு சக்திகள், மாற்று ஊடகச் செயற்பாட்டாளர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி அல்லாத எதிர்க்கட்சிகளின் பெருகிவரும் அறுதியிடலுமே பாசிசப் பிடியை உடைத்தெறியும் ஒரு தீர்மானகரமான ஜனநாயக மாற்றத்திற்கான நம்பிக்கையை உணர்த்துகின்றன.

**தலையங்கம், எம்எல் அப்டேட்,**
**06 – 12 அக்டோபர் 2026**
**தமிழாக்கம்: விஜி**

# பெண்ணை தாய் என்று புகழும்போது அதுக்குள்ள ஒரு பெரிய வஞ்சகம் இருக்கு

**(தூய்மைப் பணியாளர் போராட்டத்தின் போது அவர்கள் மத்தியில் இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் எஸ்.குமாரசாமி பேசியதிலிருந்து)**

சட்டமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்டுக்கு ஒரு உறுப்பினர் கூட கிடையாது. ஆனால், தூய்மைப் பணியாளர்கள் பிரச்சனை பற்றி பேசப்பட்டது. அமைச்சர் ராஜ்மோகன் பேசும்போது ஒன்று சொல்கிறார். நம்மளெல்லாம் தேவதைகள் என்றார். தூய்மைப் பணியாளர்களெல்லாம் தேவதைகள் என்றார். எனக்கு இதில் தொழிலாளிகளோட, பெண் தொழிலாளிகளோட பேச வேண்டிய ஒரு விஷயம் இருக்கிற மாதிரி நான் நினைத்தேன். நான் சொல்கிற கருத்து அப்படியே பரவலாக வரவேற்பைப் பெறுமா, என்பதைப் பத்தியெல்லாம் நான் கவலைப்படவில்லை. பெண்களை, பொதுவா மனிதர்களை, மனிதர்களா நடத்துனா போதும். அதுக்கு மேல நாம் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. இப்ப தேவதை அப்படின்னு சொல்றாங்க. இந்தப் புகழ்ச்சியின் மூலமா நமக்கு என்ன கிடைக்கும்? நீ தேவதை, நீ தேவதை, நீ தேவதை அப்படின்னு வரிசையா ஒவ்வொருத்தரையும் பார்த்து சொல்லிட்டா, நம்முடைய எந்த பிரச்சனை தீரும்?

இந்த மாதிரி சொல்வதில் ஒரு பெரிய ஆபத்து இருக்கு. குறிப்பாக பெண்கள் கவனமா இருக்கணும். எதில் கவனமா இருக்கணும்னா, தாய்மையைப் போற்று என்கிறார்கள். அன்பை போற்றலாம், பாசத்தை போற்றலாம், நேசத்தை பாராட்டலாம். அன்பு, பாசம், நேசம் எல்லாமே இருக்கிற நட்பு; அன்பு, பாசம், நேசம் எல்லாமே இருக்கிற தோழமை—இது எல்லாத்தையுமே போற்றிப் புகழலாம். ஆனா தாய்மையில புகழறதுக்குப் பின்னாடி வஞ்சகம் இருக்கு.

தாய்மை தாய்மை தாய்மை தாய்மை, பெண் தான் தாய், பெண் தான் தாய் அப்படின்னு புகழும்போது அதுக்குள்ள ஒரு பெரிய வஞ்சகம் இருக்கு. என்ன சொல்றாங்க? நல்ல தாய் என்கிறார்கள்.

அதாவது பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்ணை நீ பெர்ஃபெக்ட் விக்டிமா (perfect victim) இருக்கணும் என்கிறார்கள். அப்படியென்றால், நீ பாலியல் வன்முறைக்குள்ளாகிவிட்டால் அப்படியே சோகமா இருக்கணும், நார்மலா நடக்கவே கூடாது. நீ வந்து எப்பவும் அழுதுகிட்டே இருக்கணும். எப்பவும் யார் மேல புகார் சொன்னியோ அந்த ஆளோட பேசவே கூடாது. மும்பை உயர் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு குடுத்திருக்காங்க. பெர்ஃபெக்ட் விக்டிம், அதாவது கச்சிதமான, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிற பாதிப்புக்குள்ளானவராக அந்தப் பெண் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். 21-ஆம் நூற்றாண்டில் இப்பதான் இந்தத் தீர்ப்பு வருது.

சட்டமன்றத்தில் நீண்ட காலமா ஒரு அசிங்கம் இருந்தது. அந்த அசிங்கம் இப்பதான் போச்சு. அந்த அசிங்கம் என்னவென்றால், யாராவது ஒரு எம்.எல்.ஏ. முதல் முறையா பேச்சை ஆரம்பிக்கிறார் என்றால் அதுக்குப் பெயர் கன்னிப் பேச்சு. கேவலமான வார்த்தை. ஆணுக்கு அந்த பெயர் இருக்கா? விதவை ஆணுக்கு இருக்கா? கன்னி ஆணுக்கு இருக்கா? பல விஷயமும் பாத்தீர்கள் என்றால், அவை பெண்ணின் மீது சுமத்தப்பட்ட விலங்கு. பெண்ணின் மூளைக்கு, பெண்ணின் காலுக்குப் போடப்பட்ட விலங்கு. அது மாதிரிதான் தாய்மையைப் போற்று. தாய்மையைப் போற்று என்றால், நீ எப்பவும் பொறுப்பா பாத்துட்டு இருக்கணும். என்ன கஷ்டம் வந்தாலும் தாங்கிட்டே இருக்கணும். அப்படியே பூமியைப் போல தாய் இருக்கணும். பூமி தாங்கிட்டே இருக்கும், அது மாதிரி தாயும் தாங்கிட்டே இருக்கணும். பெண் எப்படி இருக்கணும்? நல்ல தாயாக இருக்க வேண்டும். ஏன் அப்படி இருக்க வேண்டும் என்று கேட்கிறேன்?

நல்ல மனிதராக இருக்க வேண்டும். ஆணாக இருக்கட்டும், பெண்ணாக இருக்கட்டும், நல்ல மனிதரா இருக்கணும். சக மனிதரை நேசிக்கணும். யாருக்குப் பாதிப்பு வந்தாலும் நேசக் கரம் நீட்டணும். எந்த அநீதி நடந்தாலும் அதை எதிர்க்கணும். ஆனா அதுக்குப் பதிலா என்ன சொல்லித்தருகிறார்கள். தாய்மையைப் போற்றுவோம். தாய்மையைப் போற்றுவோம்னா நம்ம தலையில மிளகாய் அரைக்கிறான்னு அர்த்தம். பெண்கள் நீங்க எப்பவுமே உங்களை தாய் தாய் தாய், பொறுமையானவள் பொறுமையானவள் பொறுமையானவள், அன்பானவள், எதையும் சகித்துக் கொள்பவர்கள்

என்று புகழ்ந்து தேய்த்து மிதிப்பதற்கு இடம் தந்துவிடக் கூடாது.

நாம் எல்லாத்தையுமே தலைகீழா புரட்டிப் போடணும். எல்லா அதிகார உறவுகளையும் கேள்விக்கு உள்ளாக்கணும். எல்லா அதிகார உறவுகளையும், குடும்பத்தில் இருக்கிற அதிகார உறவு வரைக்கும்.

காலங்காலமாக இந்தச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் பெண்கள். அவனும் ஒடுக்கப்பட்டவர்களில் ஒடுக்கப்பட்டவனாக இருப்பான், ஆனா அவனுக்குக் கீழே மிதிக்கிறதுக்கு ஒரு பெண் வேணும். இவரோட கதையே தேவலமா இருக்கும், இவரோட கதையே ரொம்ப ரொம்ப அவமரியாதைக்கு உள்ளானவரா இருப்பாரு. ஆனா இவர் என்ன எதிர்பார்ப்பாரு? இவரு காலுக்கு கீழே மிதிக்கிறதுக்கு ஒரு பெண் வேணும் அப்படின்னு எதிர்பார்ப்பாரு. அதனாலதான் நாம் என்ன சொன்னோம் என்றால், பெண்களுக்கு வந்து நாம் ஜாதி சொல்லவில்லை. பெண்களுக்கு நாம் அவங்களுடைய வர்க்கம் சொல்லவில்லை. பெண்களுக்கு நாம் அவங்களுடைய மதம் சொல்லவில்லை. அதனாலதான் என்ன சொன்னோம் என்றால் அருந்ததியர், ஆதி திராவிடர், அனைத்து சாதி ஏழைகள், பெண்கள் இவர்களுடைய ஒற்றுமையைக் கட்டமைக்கிற, இவர்களின் மூலமாக தமிழ்நாட்டுடைய சமூகத்தை மாற்றி அமைக்கிற ஒரு கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது அப்படின்றதுதான் மாநகராட்சிப் போராட்டத்தில நாம் துவக்கி வைத்த விஷயம்.

இப்போ நீங்க ஒன்றை கணக்குல வைக்கணும். ராஜ்மோகன் சொல்றாரு 'தேவதை'ன்றாரு. சரி, இந்தத் தேவதைன்றத நீங்க ரொம்ப நல்ல பொருள்லதான் சொன்னீங்கன்னு வச்சுப்போம்.. இப்ப தேவதைன்றாங்க, தமிழ்நாட்டு கிராமப்புறங்கள்ல இருக்கிற பள்ளிக்கூடங்கள்ல இருக்கிற கழிப்பறைகளை, அறைகளை 32,000 பேர் சுத்தப்படுத்துறாங்க. இந்த 32,000த்தில் எனக்குத் தெரிஞ்சு 31,000 பெண்கள்தான். ராஜ்மோகன் மொழியில் சொன்னால் இவங்க எல்லாம் தூய்மைத் தேவதைகள். இந்த 32,000 தூய்மைத் தேவதைகளுக்கு எவ்ளோ சம்பளம் 6,000 ரூபா.

இப்போ இந்த இடத்தில்தான் ஒரு கோரிக்கையைக் கேட்கிறோம். தாய்மை தாய்மை தாய்மை என்கிறீர்கள், தூய சக்தி தீய சக்திங்கறீங்க, ஆனா மகப்பேறு விடுப்பு குடுக்க மாட்டேங்கிறீங்க. பெண்ணு, அவதான் புள்ள பெத்துக்கணும். 10 மாசம் வயித்தில் சுமந்ததை இறக்கி வைக்கணும். அதுதான் மகப்பேறு. அந்த மகப்பேறு வலி, வேதனை. அது பெண்ணோட வாழ்வோடு பிரிக்க முடியாத ஒரு பகுதி. அந்தப் பெண்ணுக்கு மகப்பேறுக்கு முன்பும் பின்பும் லீவு தரணும். நாகரிக சமூகத்தோட சாதாரண அளவுகோல். ஒரு நாகரிக சமூகம், அந்தச் சமூகத்தினுடைய பெண்களுக்கு மகப்பேறுன்கிறது இதை யாராவது சொல்லித் தரணுமா?

திரு. ஜோசப் விஜய் எவ்வளவு படம் நடிச்சிருக்காரு? எவ்வளவு தூரம் பெண்களைப் பத்திப் பேசிருக்காரு? ராஜ்மோகன், ஆதவ் அர்ஜுனா நீங்கெல்லாம் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு தருவது சம்பந்தமாகப் "பரிசீலிக்கிறோம்"னு சொல்வதற்கு நீங்க கூச்சப்படணும். என்ன பரிசீலிக்கணும் இதில்? நீங்க சட்டமன்றத்துல ஏதேதோ 110 விதியின் கீழ் அறிவிக்கிறீங்க! 110 விதியின் கீழ் அறிவிப்பு ஜெயலலிதா செஞ்சாங்க, ஸ்டாலின் செஞ்சாங்க, அப்புறம் இப்ப விஜய் செய்யலாம். 110 விதியின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற அரசு, அரசின் கீழ் இருக்கிற அனைத்து விதமான பணியாளர்களுக்கும் பெண் பணியாளர்களுக்கும் "இன்று முதல் நான் அறிவிக்கிறேன் மகப்பேறு விடுப்பு கிடைக்கும்", என்று அறிவித்தால் முடிஞ்சு போச்சே! இது செய்யறதுக்கு என்ன பெரிய தயாரிப்பு? நிதிநிலை பார்க்க வேண்டிய அவசியம் என்ன?

அதே மாதிரி மாதவிடாய் கால விடுப்பு. பெண்ணுக்குத்தான் வரும், ஆணுக்கு வராது. பெண்ணுக்கு எப்ப மாதவிடாய் வருதோ அப்பதான் சமூகம் தழைக்கும். சமூகம் மேல மேல போகும். தலைமுறை தலைமுறையாக மானுடம் வாழ வேண்டுமென்றால், மானுடம் தழைக்க வேண்டுமென்றால் பெண் ஒரு பருவத்தில் மாதவிடாய் எய்த வேண்டும். இந்த மாதவிடாய் இன்னும் கஷ்டம்னா கஷ்டம், அது ரகசிய கஷ்டம். சொல்லிக்கக் கூட முடியாது, பகிர்ந்துக்கக் கூட முடியாது. இப்பதான் போய் சானிட்டரி பேடை ஒப்பனா வாங்குறதுக்குத் தயாராகுறாங்க. அதுலயும் நிறைய பேருக்கு சானிட்டரி பேடை பயன்படுத்த முடியாது. அதுக்கு பதிலா துணிதான். அந்தத் துணியைத் துவைச்சுக்கணும், இந்த நாகரிக சமூகத்தில் மாதவிடாய் கால விடுப்பு—இது என்ன பெருசா பேசணுமா?

அம்பிகா திரைக் கலைஞர், ரொம்ப ரொம்ப புத்திசாலித்தனமாகவும் அதே நேரம் நம்ம மேல அனுசரணையாகவும் சரியாகவும் பேசினாங்க. அவங்க என்ன கேட்டாங்கன்னா, அஞ்சும் மூணும் எட்டு; அஞ்சும் மூணும் எட்டுன்றதுக்கு பெருசா பேசணுமான்னு கேட்டாங்க. ரொம்ப சாதாரணமா இவங்க கோரிக்கையெல்லாம் நீங்க நிறைவேற்றணும். அதுக்கு எதுக்கு இவ்வளவு உட்காத்தி வச்சுட்டு "நாங்க வந்து இடம் கொடுத்திருக்கோம்" அப்படிலாம் பேசுறதுக்கு இதுல என்ன விஷயம் இருக்கு அப்படின்னு சொன்னாங்க. ❑



# பிரெஞ்சு மாணவர்கள் போராட்டம்:
# அரசின் கொடூரமும் ஊடகப் பொய்களும்

**எஸ்.வி.ராஜதுரை** 11 அக்டோபர் 2026.

டெல்லி ஜந்தர் மந்தரில் தொடங்கப்பட்ட மாணவர், இளைஞர் போராட்டம் நாடெங்கிலும் பரவி வருவதையும், அப்போராட்டம் பற்றி மோடி அரசாங்கமும் அதன் ஆதரவு ஊடகங்களும் பொய்களைப் புனைவதைப் போலவே, கடந்த ஒரு மாதமாக பிரான்சில் கல்வியிலும் கல்வி நிறுவனங்களிலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று பிரெஞ்சு மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்தை பிரெஞ்சு அரசாங்கம் கடுமையாக ஒடுக்கி வருகிறது. ஆதிக்க சக்திகளின் ஊடகங்களும் மாணவர்களின் நியாயமான போராட்டத்தின் மீது அவதூறுகளை சுமத்தி வருகின்றன.

அக்டோபர் 6, செவ்வாய்க்கிழமை அன்று, பிரான்சின் பல நகரங்களில் உயிரோட்டமான வெகுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நாட்டின் ஆறு முக்கிய தொழிற்சங்கக் கூட்டமைப்புகளில் ஐந்து, தீவிரமடைந்து வரும் பள்ளி மாணவர் இயக்கத்திற்கு ஆதரவாக அணிதிரண்டன. மூன்றாவது வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ள, பல ஆண்டுகளாகப் பள்ளி நிதிநிலையில் செய்யப்பட்ட வெட்டுக்களுக்கு எதிரான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சி, கொடூரமான காவல்துறை வன்முறை மற்றும் அரசின் பீதிக்கு மத்தியிலும் தொடர்ந்து வேகம் பெற்று வருகிறது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த முந்தைய இதே போன்ற இயக்கத்தை விட, இந்த இயக்கத்தில் மிக அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் ஈடுபட்டுள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளும் (15 முதல் 18 வயது வரை) மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகளும் (11 முதல் 15 வயது வரை) முற்றுகையிடப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களில் முப்பது பல்கலைக்கழகங்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும், தினசரி பொதுக் கூட்டங்கள் அன்றைய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றன. ஆர்ப்பாட்டங்களில், 1793 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பிரகடனத்தை (கிளர்ச்சியின் கடமை குறித்து) மேற்கோள் காட்டுவது முதல், பிரபலமான ராப் கலைஞர்களை மேற்கோள் காட்டுவது வரை, 'தலைமுறை X, தலைமுறை Z, ஒரே போராட்டம்!' என்பதிலிருந்து 'ஆறாவது தலைமுறை 68–ஐ இலக்காகக் கொண்டுள்ளது' என்பது வரை கற்பனை வளம் மிக்க வாசகங்களைக் கொண்ட ஆயிரக்கணக்கான சுயமாகத் தயாரிக்கப்பட்ட பதாகைகளைக் காணலாம்.

கிளர்ச்சியின் தீப்பிழம்புகளை அணைக்கும் அவசரத்தில், அதிகாரிகள் இந்த வாரம் நூற்றுக்கணக்கான பள்ளிகளையும் பல பல்கலைக்கழக வளாகங்களையும் முன்னெச்சரிக்கையாக மூடி, பெருமளவிலான கதவடைப்பு களை மேற்கொண்டனர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் தனது சிக்கன வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஆர்வமாக உள்ள மக்ரோனின் சிறுபான்மை அரசாங்கம், மூன்று வழிகளில் எதிர்வினையாற்றியுள்ளது.

### அரசின் அடக்குமுறை தீவிரமடைகிறது

முதலாவதாக, வன்முறை மற்றும் அச்சுறுத்தல் மூலம். முடிந்தவரை அதிக அளவில் இளம் போராட்டக்காரர்களை அச்சுறுத்தி விரட்டும் நம்பிக்கையில், காவல்துறையின் அடக்குமுறை மிகக் கடுமையாக இருப்பதை அரசு உறுதி செய்தது. சில நூறு பதின்ம வயதினர் காவல்துறையினரால் காயமடைந்துள்ளனர்; வேறு சில நிகழ்வுகள் நெஞ்சை உலுக்குகின்றன. பாரிஸ் பகுதியில், ஒரு காவல் துறை அதிகாரி 14 வயது சிறுவனின் முகத்தில் மிக அருகில் கண்ணீர்ப் புகைக் குண்டைச் சுட்டார். இதில் அவனது தாடை இரண்டு இடங்களில் நொறுங்கி, அனைத்துப் பற்களும் உடைந்து விழுந்தன; அவனது குடும்பத்தினர் தற்போது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்துள்ளனர். டூர்ஸில், 16 வயது சிறுவன் ஒருவன், தன்னை நோக்கி நேரடியாகச் சுடப்பட்ட ரப்பர் குண்டால் ஒரு கண்ணை இழந்தான்—காணொளியில், போராட்டக்காரர்களின் கண்களைப் பறித்தது குறித்து காவல்துறை பெருமை பேசுவது கேட்கிறது. மற்ற இடங்களில், பல மாணவர்கள்

கடுமையான கண் காயங்களுக்கு உள்ளானார்கள். ஒரு காவல்துறை அதிகாரி ஒரு சிறுமியை வன்முறையான முறையில் கழுத்தை நெரித்துப் பிடிக்கும் காணொளி வைரலானது, அதே நேரத்தில் லென்ஸில், கூட்டத்தைக் கலைக்கப் பயன்படுத்தப்பட்ட கையெறி குண்டு வெடித்ததில் அருகில் நின்ற ஒரு பள்ளி மாணவன் தன் கையை இழந்தான் (ஊடகங்கள் கூறுவது போல் அவன் அதை 'எடுக்கவில்லை').

மேலும் அச்சுறுத்தும் முயற்சியாக, ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் — அவர்களில் 1800 பேர் மீது மட்டுமே பின்னர் குற்றம் சாட்டப்பட்டது. இப்போதும் கூட, காவல்துறையின் இந்த அராஜகவாதிகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மறுக்கிறது. உள்துறை அமைச்சர் லாரன்ட் நுனெஸ் (Laurent Nuñez) செவ்வாயன்று, காவல்துறையின் நடவடிக்கைகளில் 'அளவுக்கு மீறிய செயல்கள்' இருப்பதாகக் கூறப்படுவதைப் பற்றிப் பேசினார். அதே நேரத்தில் முன்னாள் அமைச்சர் புருனோ ரீடெய்லோ (Bruno Retaille), குற்றவியல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களின் வயதைக் குறைக்க வேண்டும் என்று உரத்த குரலில் கோரினார் (அதாவது பதின் வயதினரையும்கூட குற்றவாளிகளாகக் கருத வேண்டும் என்பதுதான் இதன் பொருள்).

இரண்டாவதாக, அரசாங்கம் மிகச் சிறிய சலுகைகளை வழங்கியுள்ளது. அவை வெறும் வெளித்தோற்றத்திற்கு மட்டுமேயானவை. சில உயர்கல்விக் கல்விக் கட்டணங்களை உயர்த்துவதற்கான முன்மொழிவுகள் திடீரெனக் கைவிடப்பட்டன, மேலும் பள்ளி மாணவர் சங்கத் தலைவர்கள் கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த அழைக்கப்பட்டுள்ளனர். குறை களைத் தெரிவிப்பதற்காக அரசாங்கம் பெயரள விலான இணையதளத்தையும் தொடங்கியுள்ளது, மேலும் வார இறுதியில் அனைத்துப் பள்ளிகளிலும் திட்டமிடப்பட்ட 'ஆலோசனை அமர்வுகளுக்கு' ஏற்பாடு செய்துள்ளது.

இறுதியாக, தீவிர இடதுசாரி அமைப்பான 'லா பிரான்ஸ் இன்சௌமிஸ்' (La France Insoumise [கிளர்ச்சியில் பிரான்ஸ்]) இளைஞர்களை ஆட்டிவைப்பதாகச் சித்தரிக்க ஒரு பிரச்சாரத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 'வெளியிலிருந்து தூண்டிவிடுபவர்கள்' என்ற பழைய பொய் அணிதிரட்டப்படுகிறது (இந்தியாவில் 'நகர்ப்புற நக்சல்கள்' கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவதாக சொல்லப்ப டுகிறது அல்லவா? அதே போன்ற குற்றச்சாட்டை பிரெஞ்சு அரசாங்கம் இப்போது கிளர்ச்சியில் ஏடுபட்டுள்ள மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோர் மீது சுமத்துகிறது) ஏனெனில் இந்த இயக்கத்தில் 'பிரான்ஸ் இன்சௌமிஸ் கட்சி' (FI) ஒரு சிறந்த பங்கை வகிக்கிறது. முன்பு அக்கட்சி மீது சந்தேகம்கொண்டிருந்த தீவிர இடதுசாரி வர்ணனையாளர்கள் கூட, இளம் போராட்டக்காரர்கள் இக்கட்சியை தங்கள் கட்சியாகக் கருதுவதாக எழுதியுள்ளனர். அதன் தலைவர் ஜீன்-லூக் மெலென்சோன் (Jean-Luc Melenchon), நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூரில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களும் காவல்துறைக்கும் மாணவர்களுக்கும் இடையில் புகுந்து மாணவர்களைப் பாதுகாக்க உதவ வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் அனைவரும் அங்கு இருந்ததோடு, காவல்துறையின் வன்முறையைக் கண்டிப்பதில் தங்கள் குரலை எழுப்பினர்.

நாடாளுமன்றத்தில், பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு (Sebastien Lecornu), 'காவல்துறை வன்முறை' என்று பேச முடியாது என்று கூறியதுடன், 'பிரான்ஸ் இன்சௌமிஸ் கட்சி' பிரெஞ்சுக் குடியரசின் காவல்துறைப் படைகள் இனவெறி கொண்டவை என்று மறைமுகமாகச் சொல்கிறது' என்றும் புகார் கூறினார்!

**சர்வாதிகாரத்திற்கு எதிரான தீவிரமடையும் எதிர்வினை**

பள்ளி மாணவர் தலைவர்கள் இந்த வெளித்தோற்ற சலுகைகளால் ஏமாறவில்லை. மேலும் முந்தைய போராட்ட நாளுக்கு இரண்டு நாள்களுக்குப் பிறகு, புதிய போராட்ட நாளை அறிவிப்பதன் மூலம் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். தொழிற்சங்கத் தலைவர்கள் இளைஞர்களிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் காலதாமதம் செய்வதையே விரும்பி, நவம்பரில் வேலைநிறுத்தத்தை நடத்தலாம் என்று முன்மொழிகின்றனர்.

ஆதிக்க சக்திகளின் ஊடகங்கள் இந்த இயக்கத்தின் மீது அவதூறு பரப்புவதிலும், உண்மையைத் திரிப்பதிலும் கடுமையாக உழைத்து வருகின்றன. ஊடகக் கண்காணிப்பு அமைப்பான அக்ரிமெட் (Acrimed), இந்த வாரத் தொடக்கத்தில், பிரதான பொதுத் தொலைக்காட்சி அலைவரிசையான 'பிரான்ஸ் 2'-இன் முக்கிய நேர தேசியச் செய்திகளில், தற்போதைய நிகழ்வுகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசப்பட்ட நேரத்தை அளவிட்டது. அந்த நேரத்தில் 75%, போராட்டக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சேதங்களைப் பற்றிப் பேசவும், 8% இயக்கத்தின் மீதான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டது.

**கோரிக்கைகளும், பிரான்ஸ் இன்சௌமிஸ் அமைப்பு குறித்த அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகளுக்கு 12% ஆதரவும்!**

அடுத்த மே மாதம் நடைபெறவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்னதாக, பிரான்சில் நிலவும் கடுமையான அரசியல் துருவமயமாக்கலின் பின்னணியில் இந்த எழுச்சி நடைபெறுகிறது. கருத்துக் கணிப்புகளின்படி, பாசிச வேட்பாளர் முன்னணியில் உள்ளார்; தீவிர இடதுசாரியான 'லா பிரான்ஸ் இன்சௌமிஸ் அமைப்பி'ன் வேட்பாளர் ஜீன்-லூக் மெலன்கான் இரண்டாம் இடத்தில் உள்ளார். மாணவர் பேரணிகள் முழுவதும் பாசிச எதிர்ப்பு பதாகைகள் மற்றும் கொடிகள் பரவலாகக் காணப்படுவது, சிக்கன நடவடிக்கைகளுக்கும் காவல்துறை வன்முறைக்கும் எதிரான தங்களின் போராட்டம், தீவிர வலதுசாரிகளுக்கு எதிரான பரந்த போராட்டத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது என்பதை இளைஞர்கள் உணர்ந்துள்ளதையே பிரதிபலிக்கிறது.

பெரும்பாலான மக்கள் (சமீபத்திய கணக்கெ டுப்பின்படி சுமார் 62%) பள்ளி மாணவர்களின் இயக்கத்தை ஆதரிக்கின்றனர் என்பதை கருத்துக் கணிப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன. மிகவும் தேவையான இந்த எழுச்சியும் ஒற்றுமையும் வெளிப்படுமா என்பதை அடுத்த வாரத்தில் பார்க்கலாம். (தொடரும்) **நன்றி—மின்னம்பலம்**

# ஒரு யூனிட் மின்சாரம் 35 ரூபாய்க்கு கொள்முதல்; உடன்குடி அரசு மின்திட்டம் தனியாருக்கு தாரைவார்ப்பு

**சந்திரமோகன்**

தமிழ்நாட்டில், தவெக ஆட்சிக்கு வந்ததில் இருந்து கடந்த 3 மாதங்களாக மின்வெட்டுகள் அன்றாட செய்திகளாகி விட்டன. மின்சார அமைச்சர் தரப்பிலிருந்து, ‘‘அவை பவர்கட் அல்ல, மின்தடைகள் தான்’’ என்ற புதிய விளக்கம், புதிய காரணங்கள் சொல்லப்பட்டு வந்தன. எனினும் மின்வெட்டுகள் தொடர்ந்து அதிகரிக்கவே, வரலாறு காணாத விலைக்கு யூனிட் ரூ.35 க்கு மின்சாரத்தை தனியார் கேஸ் மின்உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தவெக அரசு வாங்கி வருகிறது. இதே தவெக அரசு தான், ‘கடந்த திமுக ஆட்சியில் யூனிட் மின்சாரம் ரூ.11 முதல் ரூ.20 வரை கொள்முதல் செய்ததில் ஊழல் நடந்துள்ளது’ எனக் குற்றம்சாட்டி நடைமுறையில் இருந்த மின் கொள்முதல் ஒப்பந்தங்களை எல்லாம் கடந்த மாதத்தில் ரத்து செய்து இருந்தது.

யூனிட் ரூ.35க்கு கொள்முதல் ஏன் என்பது பற்றி மின்சார அமைச்சர் நிர்மல்குமார் தரும் விளக்கங்கள்:-

*1) பீக் ஹவர் மின்சாரத் தேவைக்காகவே ( அதாவது மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை நமது தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே) வாங்கினோம்; அதுவும் 1000 மெகாவாட் மட்டுமே யூனிட் 35 ரூபாய் விலைக்கு வாங்குகிறோம்.*

*2) நமது சொந்த மின்உற்பத்தி தினசரி 5300 MW தான்; ஆனால், தற்போதைய தினசரி மின்சார நுகர்வு 21,700 மெகாவாட்டாக உயர்ந்துள்ளதால், பீக் ஹவர் தேவைக்காக மட்டுமே 35 ரூபாய் விலையில் வாங்குகிறோம்.*

*3) கேஸ் மின்சார உற்பத்தி செலவு ரூ.20 முதல் 25 வரை ஆகும். நாம் நமது நாப்தா மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்தால் யூனிட் செலவு ரூ.45 ஆகிவிடும். எனவே, ரூ.35 என்பது பெரிய தொகை இல்லை. அக்.15 முதல் அக்.31 வரை 16 நாட்களுக்கு மட்டுமே வாங்குவதால், கூடுதல் செலவு சுமார் ரூ.100-கோடி மட்டுமே ஆகும்.*

உண்மைநிலை வெளியிடப்பட வேண்டும்!

*1) தமிழ்நாடு மின்சார வாரியத்தில்,*

தமிழ்நாட்டின் அன்றாட மின்சாரத் தேவை பற்றி கண்காணிக்கும் அதிகாரிகள் குழு ஒன்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

கோடைகாலத்தில் பீக்ஹவர் நெருக்கடி பற்றி அதிகாரிகள் குழு உரிய எச்சரிக்கை செய்தபோதும், முன்கூட்டியே குறுகியகால மின் கொள்முதல் ஒப்பந்தம் போடாமல், பழைய ஒப்பந்தங்களை ரத்து செய்து நாட்களை கடத்திவிட்டு அவசர அவசரமாக 35 ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டுள்ளது. இதற்கு காரணம்

நிர்வாகத் திறமை இன்மையா அல்லது அரசியலா என தவெக அரசு மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்.

*2) கடந்த திமுக ஆட்சியிலேயே தினசரி மின் நுகர்வு 20,000 மெகாவாட்டை கடந்துவிட்டது. இருந்தபோதும், திமுக அரசாங்கம் எப்படி மின்வெட்டுகள் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள்?*

திமுக ஆட்சியில் TANGEDCO வின் கீழ் உள்ள அனைத்து அனல்மின் நிலையங்களும், இயன்றவரை முழுமையான மின் உற்பத்தி செய்ததாக த.நா. மின்வாரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தவெக அரசு அமைந்த பின்னர், எண்ணூர், வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி, உடன்குடி யூனிட் 1 உட்பட அனைத்து அனல்மின் நிலையங்களும் தினசரி முழுமையான உற்பத்தியில் ஈடுபட்டனவா? தினசரி ஒவ்வொரு அனல்மின் நிலையத்திலும் உற்பத்தியான மின்சார அளவு எவ்வளவு? அனைத்து அனல், புனல், கேஸ் மின்நிலையங்களில் உற்பத்தியான தினசரி மின்சாரம் எவ்வளவு? கடந்த திமுக அரசாங்கத்தின் மின் உற்பத்தியையும் ஒப்பிட்டு, தவெக அரசு ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்.

*3) கேஸ் மின்சார நிலையங்கள் மூலம்* முழுஅளவு மின் உற்பத்தி செய்தால், யூனிட்டுக்கு ரூ.5 தான் உற்பத்தி செலவாகும். கடந்தகாலத்தில் குத்தாலம் கேஸ் மின்நிலையத்தின் உற்பத்தி செலவுகள் ஆவணங்களாக உள்ளன. மின்சார அமைச்சர் கூறுவதுபோல, நம்மிடம் நிறைய நாப்தா மின்நிலையங்கள் கிடையாது. பேசின்பிரிட்ஜ் மின்நிலையம் (120 MW) மட்டுமே நாப்தாவில் இயங்கக் கூடியது. அதிலும் தயாரிப்பு செலவு யூனிட் 12 ரூபாய் மட்டுமே ஆகும். நாப்தா கிடைக்காதால், தற்போது அது டீசலில் இயக்கப்படுகிறது. அதேபோல இயற்கை எரிவாயு கிடைக்காததால் தற்போது

திருமாக்கோட்டை (கோவில்களப்பால்) கேஸ் மின்நிலையம் (108 MW) முழுமையாக மூடப்பட்டுள்ளது.

எனவே, இயற்கை எரிவாயு, நாப்தா, நிலக்கரி போன்ற எரிபொருள் கொள்முதல்

பிரச்சினைகளை சரிசெய்ய தவெக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையும் வெளியிடப்பட வேண்டும்.

தனியாருக்கு தாரை வார்க்கப்படும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான உடன்குடி அனல் மின் நிலையம்!

ஒரு யூனிட் மின்சாரம் 35 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படும் நிலையில் இருக்கும்போது, சொந்த மின்உற்பத்தி குறைவுதான் என அறிவிக்கும் நிலைமையில், தமிழ்நாடு அரசு அவசரமாக உடன்குடி அரசு மின்நிலையத்தின் 4000 மெகாவாட் உற்பத்தியை தனியாருக்கு தாரை வார்க்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

உடன்குடி அனல் மின் நிலையம் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் (கல்லாமொழி கடற்கரை அருகில்) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் (TANGEDCO / TNPGCL), சுமார் ரூ.13,000 கோடி திட்ட மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மிக உய்ய (Supercritical) அனல் மின் திட்டமாகும்.

முதல் அலகு யூனிட் 1 (660 மெகாவாட்) மார்ச் 13, 2026 அன்று தொடங்கியது. செப்டம்பர் 2026-ல் வணிக ரீதியான மின் உற்பத்தியும் துவங்கியது. இரண்டாம் அலகின் பணிகள் இந்த ஆண்டு (2026) இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2026 செப்டம்பரில், உடன்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரிவுகள் உள்ளிட்ட ஏழு திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்துவது தொடர்பாகத் தமிழக அரசு அரசாணை ஒன்றையும் வெளியிட்டுள்ளது; சமீபத்தில் இந்த மின் நிலையத்தில் தலா 800 மெகாவாட் திறனில் கூடுதலாக 4 அலகுகள் அமைக்கும் விரிவாக்கத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, 4 x 660 மெகாவாட்டில் இருந்து 4x800 மெகாவாட் ஆக உயர்வு செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில், தவெக அரசின் ஆட்சியில், தமிழக மின் உற்பத்தி கழகத்தின் போர்டு 23.09.2026 அன்று கூடி எடுத்த மிகமுக்கிய முடிவு 12.10.2026 ல் கையெழுத்திடப்பட்டு வெளியாகி அதிர்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான உடன்குடி அனல் மின் நிலையத்தை PPP அடிப்படையில் - 'பொதுத்துறை தனியார் கூட்டு' என்ற அடிப்படையில், தனியாருக்கு தாரை வார்க்கப்படுவதை அறிவிக்கிறது. அதாவது, இதுவரை அரசே நேரடியாக கட்டி வந்த உடன்குடி மின்திட்டத்தின், ஸ்டேஜ் 2 ல் 2× 800 மெகாவாட் மற்றும் ஸ்டேஜ் 3ல் 2×800 மெகாவாட் மற்றும் ஸ்டேஜ் 1 ல் 2வது யூனிட் 800 மெகாவாட் ஆக மொத்தம் PPP யில் 4000 மெகாவாட் மின்நிலையங்கள், 'பொதுத்துறை தனியார் கூட்டு' - Public Private Partnership (PPP) என்றடிப்படையில் உருவாக்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது இனி தனியார் மின்நிறுவனங்கள் தான் உடன்குடியில் மின்உற்பத்தி செய்து தமிழக அரசுக்கு விற்பனை செய்யும்; அங்கு உற்பத்தியாகும் மின்சார கட்டணத்தையும் தனியார் நிறுவனங்கள் தான் நிர்ணயிக்கும். அதானி பவர், டாடா பவர், ஜேஎஸ்டபிள்யூ போன்ற கார்ப்பரேட் பெரு நிறுவனங்கள் தான் 4000 மெகாவாட் மின்நிலையங்களை கட்டி, PPP நிபந்தனைகள் (Terms and conditions) அடிப்படையில், 25 வருடத்திற்கும் தாங்கள் விருப்பப்படி கட்டுப்பாடு இல்லாமல் மின்சாரத்தை விற்பார்கள். பொதுத்துறை மின்நிலையங்களில் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செலவு ரூ.6 முதல் ரூ.10 வரை ஆகும். ஆனால், தனியார் மின்நிலையங்கள் மின்சார தட்டுப்பாடு மற்றும் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப தமிழக அரசுக்கு மின்சாரத்தை விற்று கொள்ளை இலாபம் அடிப்பார்கள்.

கூடுதலாக, தனியார்மயம் ஆவதால் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய அரசுத்துறை வேலைவாய்ப்புகள் பறிபோகும்; நீண்டகால நோக்கில் மதிப்பிட்டால், நமக்கு சொந்தமான மின்னுற்பத்தியை கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்குத் தாரைவார்த்துவிட்டு, தமிழ்நாட்டின் மின் தன்னிறைவை இழக்க நேரிடும்.

மின்தடைகள், தட்டுப்பாடுகள், மின்கட்டண உயர்வுகளுக்கு மிகமுக்கியக் காரணம் பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் இருப்பதே ஆகும். ஒன்றிய பிஜெபி அரசு கொண்டுவந்துள்ள மின்சார திருத்த சட்டம் மற்றும் கொள்கைகள், அரசு வசமுள்ள பொதுத்துறை மின்உற்பத்தி நிலையங்களையும், மின்விநியோக கட்டமைப்பையும் தனியார் பெருமுதலாளிகளுக்கு தாரைவார்க்க வழிவகுத்துள்ளன.

உடன்குடி மின்திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஒருபுறம்; "பொதுநலன்" என்பதற்காக, நமது விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் சாகுபடி நிலங்களை மின்நிலையத்திற்கு வழங்கியுள்ளது மறுபுறம். ஆனால், இவை பற்றி எல்லாம் கவலைப்படாத தவெக அரசாங்கம், தமிழ்நாட்டின் அரசு மின்னுற்பத்தி நிலையங்களை தனியாருக்குத் தாரைவார்த்திட அவசரம் காட்டுகிறது. அனுமதியோம், கார்ப்பரேட் ஆதரவு நடவடிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டும்.

# ‘ஜெம் கிரானைட்ஸ்’ வீரமணி: சுதந்திரமாக நடமாடிய ஒரு பாலியல் குற்றவாளியும் ஊழல் நிறைந்த அமைப்பும்

## அகில இந்திய மாணவர் கழகம்

கிரானைட் தொழில் அதிபர் “ஜெம் கிரானைட்” வீரமணி, பல சிறுமிகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றத்திற்காக அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் பெரும் அதிர்ச்சியை இந்த வழக்கு ஏற்படுத்தியுள்ளது. பல ஆண்டுகளாக வீரமணிக்குச் சட்ட விதிகளிலிருந்து நடைமுறை விலக்கு அளிக்கப்பட்டுள்ளதையும் ஊழலில் ஊறிப்போன ஒரு அமைப்பையும் இவ்வழக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. பென் டிரைவுடன் சமர்ப்பிக்கப்பட்ட காணொளியில் காணப்படுவது வீரமணிதான் என்பதை ஆகஸ்ட் 29 அன்று பெருநகர சென்னை காவல்துறை உறுதி செய்தது. ‘தி இந்து’ நாளிதழின் செய்தியின்படி, ஜெஃப்ரி எப்ஸ்டீன் வழக்கில் சிறுமிகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றத்திற்கு உதவியதற்காகக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட கிஸ்லைன் மேக்ஸ்வெல்லின் பாத்திரத்தோடு, வீரமணியின் பெண் உதவியாளர் சாந்தியின் பங்கை ஒப்பிடலாம் என்று ஒரு மூத்த காவல்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். உண்மையில், வீரமணியுடன் தொடர்புடைய ஒரு தற்கொலை வழக்கும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

**விளிம்புநிலை மக்களின் சுரண்டல்**

போக்சோ சட்ட சிறப்பு நீதிமன்ற நீதிபதி பத்மா சண்முகசுந்தரம், இவ்வழக்கினை மூடிவிட காவல்துறை எடுத்த முயற்சியைத் தடுத்து நிறுத்த உத்தரவு பிறப்பித்த பின்னர்தான் இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது என்பது மிகுந்த கவலை அளிக்கிறது. திமுக ஆட்சியின் போது காவல்துறையினர் ஆரம்பத்தில் இவ்வழக்கினை மூடிவிட அறிக்கையைத் தாக்கல் செய்திருந்த நிலையில், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தவெக அரசாங்கமும் அதே போன்றதொரு முடிவை எடுக்க முயன்றது என்பதைக் கவனிக்க வேண்டும். எனவே, இவ்வழக்கில் நீதி வழங்குவதில் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளின் ஆர்வம் உண்மையிலேயே கேள்விக்குரியதாகவே உள்ளது.

மேலும், வீரமணிக்கு இரையாகும் விளிம்புநிலைச் சிறுமிகளை உருவாக்கும் சாதி-வர்க்கச் சிக்கல் மிகவும் வெளிப்படையானதாக உள்ளது. இது, தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சாதி, வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் பாலியல் ரீதியாகச் சுரண்டப்படுவது குறித்து 1950களில் கேத்லின் கௌஃப் எழுதிய நூல்களை நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

‘தி இந்து’ நாளிதழ் செய்தியின்படி, வீரமணி பல ஆண்டுகளாக 12 முதல் 16 வயதுடைய சிறுமிகளைத் தொடர்ந்து குறிவைத்துள்ளார். சிறு தொகைப் பணம், விளையாட்டு காலணிகள், சாக்லேட்டுகள், செல்போன்கள் ஆகியவற்றைக் காட்டி அவர் குழந்தைகளைக் கவர்ந்துள்ளார். நிதி உதவி தேவைப்படும் சிறுமிகள் கண்டறியப்பட்டு அணுகப்பட்டுள்ளனர்; இதன் மூலம் அவர்கள் சுரண்டப்பட்டு, 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையிலான தொகைகளைக் கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், வீரமணி குழந்தைகளை ஹோட்டல்களில் நடக்கும் விருந்துகளுக்கு அழைத்துச் சென்றதும் அவர்களை ஆடம்பரக் கார்களில் ஏற்றிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததும் குற்றச்சாட்டுகளில் கூறப்பட்டுள்ளது. இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்தது அதிர்ச்சியளிக்கிறது.

**“டிஆர்பி ரேட்டிங்கை விட வாழ்க்கையில் வேறுபல விஷயங்கள் உள்ளன”**

சிறுமிகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய நிகழ்வுகளின் காணொளிகளையும் காட்சிப் பிம்பங்களையும் ஊடகங்கள் எவ்வித கூருணர்வுமற்ற முறையில் பகிர்ந்துகொண்டதைத் தொடர்ந்து, அவற்றை வெளியிடவோ அல்லது பரப்பவோ ஊடக நிறுவனங்கள், இடைத்தரகர்கள், டிஜிட்டல் தளங்களுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. உண்மையில், “டிஆர்பி ரேட்டிங்கை விட வாழ்க்கையில் வேறு சில முக்கியமான விஷயங்களும் உள்ளன” என்று நீதிபதி குறிப்பிட்டுக் கூற வேண்டியதாயிற்று. மேலும், அத்தகைய காட்சிகள் செய்தி விவாதங்களின் போது ஒளிபரப்பப்பட்டால், “இதன் மூலம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அஞ்சி, மற்ற பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறையினரிடம் வாக்குமூலம் அளிக்க முன்வராமல் போகக் கூடும் என்ற வெளிப்படையான சாத்தியக்கூறு உள்ளது” என்றும் நீதிமன்றம் அடிக்கோடிட்டுக் காட்டியது.

**பாதிக்கப்பட்டவர்களை கவனத்தில் கொள்ளாமல்**

**பழிசுமத்தும் அரசியல் விளையாட்டு**

வெளிச்சத்திற்கு வந்துள்ள இந்த நிகழ்வு, ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே ஒரு போட்டிக்கு வழிவகுத்துள்ளது. மேலும் இது பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் மீது எந்தவித கூருணர்வுமற்ற முறையில் நடத்தப்படுகிறது. மேலும், அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களுடனும் வீரமணிக்கு உள்ள தொடர்புகள், இது ஒரு கட்சியின் பிரச்சினை மட்டுமல்ல, ஒட்டுமொத்த அமைப்பின் பிரச்சினை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. வழக்கை மூடி மறைப்பதில் திமுக, அதிமுக, பாஜக கட்சிகள் ஒன்றுக்கொன்று கூட்டு வைத்துள்ளதாக தவெக தலைவரும் தற்போதைய முதலமைச்சரும் குற்றம்சாட்டியுள்ள நிலையில், விசாரணையைத் தடுத்து நிறுத்த முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை திமுக மறுத்துள்ளது. வீரமணியைப் பாதுகாக்க தனது அரசாங்கம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். உண்மையில், வீரமணிக்கு எதிரான வழக்கு அரசாங்கத்திற்குத் தெளிவாகத் தெரிந்திருந்த நிலையிலும் கடந்த ஜூலை 6 அன்று கூட சில தவெக அமைச்சர்கள் வீரமணியுடன் ஒரே மேடையைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். அன்றைய நாள் ஜேஎன்யு துணைவேந்தர் சாந்திஸ்ரீ துளுபுடி அவர்களும் அதே மேடையைப் பகிர்ந்து கொண்டார். இதேபோல், திமுக, தவெக தலைவர்களுடன் வீரமணிக்கு உள்ளதாகக் கூறப்படும் தொடர்புகள் குறித்த பல பதிவுகளும் படங்களும் சமூக ஊடகங்களில் உலாவி வருகின்றன. மறைந்த முதல்வர் ஜெ.ஜெயலலிதா ஆட்சியில் இருந்த 2013 ஆம் ஆண்டிலேயே வீரமணிக்கு எதிராகப் புகார்கள் அளிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த பழிசுமத்தும் அரசியல் விளையாட்டு ஒவ்வொரு கணமும் தீவிரமடைந்து வருகிறது.

**முக்கியமான சில கேள்விகள்!!**

இந்த வழக்கின் சில அண்மைய நிகழ்வுகள் வீரமணியின்செல்வாக்கைச்சுட்டிக்காட்டுகின்றன. தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகி எம்.பி.ரஞ்சன் குமார், கடந்த 2024 ஆம் ஆண்டிலேயே வீரமணி, சாந்தியின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சென்னை காவல்துறையிடம் முறைப்படி புகார் அளித்திருந்ததாக அண்மையில் அறிவித்துள்ளார். மேலும், தான் முதலில் அப்போதைய தெற்கு மண்டல கூடுதல் ஆணையர் என்.கண்ணனை அணுகியதாகவும் அவர் அந்தத் தகவலைச் சென்னை காவல் துறை ஆணையர் ஏ.அருணிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

**இந்தப் பின்னணியில், எழுப்பப்படும் சில முக்கிய கேள்விகள்:**

★ காவல்துறையினரிடம் 2024 ஆம் ஆண்டிலேயே பெயர்களும் காணொளிக் காட்சிகளும் இருந்திருந்தால், அதிகாரப்பூர்வ வழக்கு விசாரணை ஏன் 2025 அக்டோபரில் மட்டுமே தொடங்குகிறது?

★ காங்கிரஸ் நிர்வாகி ஏன் இந்த வழக்கு தொடர்பாக மற்றவர்களை அணுகவில்லை?

★ காவல்துறை எந்தவிதமான ஆதாரங்களையும் கண்டறியாமல் போனதற்கு முந்தைய அரசாங்கத்தின் பங்கு என்ன?

★ ஜூலை 6 அன்று சில தவெக அமைச்சர்கள் ஏன் வீரமணியுடன் ஒரே மேடையைப் பகிர்ந்து கொண்டனர்?

★ சிறப்பு நீதிபதியின் உத்தரவுக்கு முன்பு, காவல்துறையினர் வழக்கினை மூடிவிடும் அறிக்கையைத் தாக்கல் செய்ய ஏன் இரு அரசாங்கங்களும் ஒப்புக்கொண்டன?

★ காவல்துறையினர் இதற்கு முன்பு வழக்கினை மூடிவிடும் அறிக்கையைத் தாக்கல் செய்திருந்த நிலையில், மறுவிசாரணை எப்படி இவ்வளவு விரைவாக புதிய ஆதாரங்களைக் கண்டறிந்தது?

★ காவல்துறையினர் அசல் காட்சிகளை திடீரென மீட்கக் காரணமாக இருந்தது எது?

இப்போது, 'ஜெம் கிரானைட்ஸ்' நிறுவனர் ஆர். வீரமணிக்கு எதிரான போக்ஸோ வழக்கு, அது தொடர்பான பிற விவகாரங்களை விசாரிக்கத் தமிழ்நாடு காவல்துறை நான்கு பேர் கொண்ட, அனைத்து மகளிர் சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. அந்தக் குழுவில் உள்ள ஒருவர் தன்னை விடுவிக்குமாறு கேட்டதால், அவருக்குப் பதிலாக வேறொருவர் அக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார். இன்னொருபுறம் தமிழ்நாட்டு போலீஸார் விசாரிக்கக் கூடாது சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதை தள்ளுபடி செய்து விட்டது சென்னை உயர்நீதிமன்றம். வீரமணியால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போதுதான் புகார் கொடுக்க முன் வந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை வீரமணிக்கு எதிராக 6 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசியல் களத்தின் பல்வேறு துருவங்களில் உள்ள கட்சிகளும் முதலாளிகளால் தங்கள் விருப்பப்படி வளைக்கப்படலாம் என்பதற்கும் தாராளவாத ஜனநாயகத்தில் சட்டம் எவ்வாறு கேலிக்குள்ளாக்கப்படலாம் என்பதற்கும் இவ்வழக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இன்றைய ஆட்சியாளர்கள், முந்தைய ஆட்சியாளர்கள் என ஒருவர் மாற்றி ஒருவரை குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள், அதிகாரிகள் என பலரும் வீரமணியைக் காப்பற்றவே முயன்றுள்ளார்கள். நீதிபதியின் தலையீடுதான் இவ் வழக்கை விசாரணைக்கே கொண்டு வந்துள்ளது. காவல்துறையிலும், பல்வேறு அரசியல் கட்சிகளிலும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தவர்களைக் கைது செய்வது உட்பட இவ்வழக்கு சுதந்திரமாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனை வழங்கப்பட வேண்டும்.

# முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்புக்கு மாற்று சோசலிசமே




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை ஆகிய இடதுசாரி கட்சிகளின் தமிழ்நாடு ஒருங்கிணைப்புக் குழுவின் 6வது கூட்டம், அக்டோபர் 12, 2026 அன்று சென்னை திருப்பெரும்புதூரில் உள்ள மக்கள் மாமன்றம், சிபிஐஎம்எல் அலுவலகத்தில் நடைபெற்றது. சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், சிபிஐ மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், சிபிஐஎம்எல் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி மற்றும் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதற்கு முன்பு மூன்றாவது ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் சென்னை அம்பத்தூரில் உள்ள தோழர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இடதுசாரி கட்சிகள் ஒருங்கிணைப்புக் குழுவின் அறைகூவல் மற்றும் செயல்திட்டம் பற்றி விரிவாக விவாதித்து இறுதி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) நவம்பர் 10, சென்னையில் பெருந்திரள் கருத்தரங்கம் நடத்தப்பட்டு இடதுசாரி கட்சிகள் ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டு அறைகூவல் வெளியிடப்படும்.

2) டிசம்பர் 2026 மற்றும் சனவரி 2027 ஆகிய மாதங்களில் திருநெல்வேலி, மதுரை, திருவாரூர், கோவை, சேலம், கடலூர் ஆகிய 6 மண்டலங்களில் கூட்டு அறைகூவல் விளக்க மண்டல கருத்தரங்குகள் நடத்தப்படும்.

3) மார்ச்.23, 2027 அன்று திருச்சியில் இலட்சக்கணக்கானவர் பங்கேற்கும் மாபெரும் பேரணி நடைபெறும்.

**கொடிப் போராட்டம்**
**இந்திய விடுதலைப்போராட்ட வரலாற்றில் மகத்தான அத்தியாயம்.**

*1923 – ஆம் ஆண்டில், மூவர்ணக் கொடியை ஏற்றியதற்காக ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அதுவே இந்தியாவின் தேசியக் கொடியின் வரலாறு!*
*1935 ஆகஸ்ட் 23 அன்று, லக்னோவின் அமீனாபாத் பகுதியில் மூவர்ணக் கொடியைத் தனது கைகளில் ஏந்தியபடி குலாப் சிங் லோதி வீரமரணம் அடைந்தார்.*
ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் மீண்டும் ஒருமுறை இளம் இந்தியர்கள் கொடிப் போராட்டத்தை (ஜண்டா சத்தியாகிரகம்) நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
தலைவர்கள் கைது செய்யப்படுவதையும், காவல்துறையின் கண்மூடித்தனமான வன்முறை ஒடுக்குமுறையையும், அடுக்கடுக்கான தடுப்பரண்களையும், பெருமளவிலான இராணுவப் படையினர் குவிப்பையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, நூற்றுக்கணக்கான மாணவர் செயற்பாட்டாளர்களும் இளம் இந்தியர்களும் டெல்லியின் மையப்பகுதியான கன்னாட் பிளேஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூவர்ணக் கொடியை ஏற்றுவதில் இன்று வெற்றி பெற்றனர்.
அசைக்க முடியாத உறுதியும் துணிச்சலும் கொண்ட இளம் தலைமுறையினரின் (Gen Z) எழுச்சிக்கு வீரவணக்கம்!

## மதம் மாறினால் இட ஒதுக்கீடு கிடையாது – இந்திய உச்ச நீதிமன்றம்.

# இது சமூக நீதிக்கு; அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது!

இந்து மதத்தில் இருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியவர் முஸ்லீம் மதத்தில் உள்ள இட ஒதுக்கீடு சலுகையைப் பெற முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தூத்துக்குடியைச் சேர்ந்த சமீர் அகமது என்பவர் தொடுத்த வழக்கில், தமிழ்நாடு அரசு கடந்த 9.3.2024ல் பிறப்பித்த அரசாணையையும் இரத்து செய்துள்ளது உச்சநீதிமன்றம்.

இந்து மதத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலினத்தவர் இஸ்லாத்திற்கு மாறினாலும் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீட்டுச் சலுகைகள் கிடைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்து இருந்தது. அந்த அரசாணைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம், மதம் மாறியவர்கள் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் பெறும் இட ஒதுக்கீட்டைப் பெற முடியாது என்று கூறியது மட்டுமின்றி, தமிழ்நாடு அரசு 9.3.2024ல் பிறப்பித்த அரசாணையையும் இரத்து செய்தது. அதற்கு எதிரான மேல் முறையீட்டில்தான் உச்ச நீதிமன்றமும் அதை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பில் மதம் மாறிய ஒருவர் ஏற்கனவே முஸ்லீம் மதத்தில் உள்ள ஒருவரைப் போன்றவர் அல்ல. அது பிறப்பால் வருவது எனக் கூறியுள்ளது. ஆனால், மனுதாரர் சமீர் அகமது மதம் மாறியதால் அவருக்கு ஏற்கனவே பிறப்பால் இந்து மதத்தில் கிடைத்து வந்த இட ஒதுக்கீடும் தற்போது கிடைக்காது. ஏனெனில், சாதி இல்லாத ஒரு மதத்திற்கு அவர் சென்று விட்டார் என்றும் சாதியால்தான் இட ஒதுக்கீடு என்பதால் இந்து மதத்தை விட்டு வெளியேறுவது சாதியை விட்டு வெளியேறுவது. எனவே இட ஒதுக்கீட்டுச் சலுகையை பெற முடியாது என்று சொல்லியுள்ளது உச்சநீதிமன்ற நீதிபதிகள் பிரசாந்த் குமார் மிஸ்ரா, ஸ்ரீசந்திரசேகர் அமர்வு.

ஒரு குறிப்பிட்ட மதத்தின் சமூக அமைப்பில் பெற்றிருந்த பிற்படுத்தப்பட்ட நிலை, மற்றொரு மதத்திற்கு மாறும்போது, அதன் அந்தஸ்தை இழந்துவிடும். அரசியல் சாசன சட்டப்பிரிவு 16(4)ன் கீழ் வழங்கப்படும் இடஒதுக்கீடு சலுகைகளை மதம் மாறிய பின் இழக்க நேரிடும். புதிதாக மதம் மாறியவர்களுக்கு இடஒதுக்கீடு சலுகைகள் பொருந்தாது என்று கூறியுள்ளது.

இது இடஒதுக்கீட்டின் அடிப்படையையே காலி செய்கிறது. இட ஒதுக்கீட்டுச் சலுகை என்பது பொருளாதார அடிப்படையிலானது அல்ல. இது சமூகநீதி மற்றும் சமூக அந்தஸ்து சம்பந்தப்பட்டதாகும். ஒரு பிற்படுத்தப்பட்டவரோ, மிகவும் பிற்படுத்தப் பட்டவரோ, பட்டியலினத்தவரோ இந்து மதத்தில் இருந்து இஸ்லாத்திற்கோ கிறிஸ்தவத்திற்கோ மாறினாலும் சாதிய ரீதியான அவர்களது சமூக அந்தஸ்து மாறுவதில்லை. அதிலும் குறிப்பாக, பட்டியலினத்தவர்களுக்கு பழைய அந்தஸ்தே தொடரும் நிலைதான் இன்றைக்கும் சமூகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. பண்பாட்டு ஆய்வாளர் அறிஞர் தொ.பரமசிவம், ‘மதம் மாறிடலாம், ஆனால், சாதி மாற முடியாது’ என்று சொல்வார். தென்காசி மீனாட்சிபுரத்தில், இந்து மதத்தில் இருந்த சாதியாதிக்கக் கொடுமை தாங்காமல் பட்டியலின மக்கள் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் முஸ்லீம்களாக மாறினார்கள். அவர்கள் முஸ்லீம்களாக மாறினாலும் அந்தக் குடும்பத்துப் பெண்களுக்கு மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்பது மட்டுமின்றி, பழைய நிலையிலேயே அவர்களின் வாழ்க்கை இருந்தது என்பதை ‘கருப்பாயி என்கிற நூர்ஜகான்’ விவரிக்கிறது. இன்றைக்கும் நெல்லை மாவட்ட திருச்சபைகளில், தலித், நாடார் மற்றும் இதர சாதி தகராறுகளும் மோதல்களும் இருந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

தான் விரும்பிய இறையை மதத்தை தேர்வு செய்தவர் தன் சொந்த மதம் அல்லது மாறிய மதம் என்ற இரண்டு பக்கமும் உள்ள இட ஒதுக்கீடு சலுகையைப் பெற முடியாது. அவர் மீண்டும் இந்து மதத்திற்கே திரும்பினால், இழந்த இடஒதுக்கீட்டுச் சலுகையை அவருக்கு வழங்குவது குறித்து அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*The bond lost* என்ற ஆய்வு நூல் கோயம்புத்தூர் மாவட்ட பகுதியில் உள்ள விடுதலைக்கு முன்னர் அருந்ததியர் மக்கள் கிருஸ்தவத்திற்கு இடம் பெயர்ந்ததை ஆய்வு செய்கிறது. அது அய்ரோப்பிய ஆய்வாளர் குழு தொகுத்த நூல். ஆயிரக்கணக்கான அருந்ததியர் மக்கள் கிருஸ்துவத்திற்கு திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் மதம் மாறினர். இந்த மாற்றம் 1935 ஆண்டு அரசமைப்பு சட்டப்படி தடுக்கப்பட்டது. மதம் மாறியவர் சலுகையைப் பெற முடியாது என்று அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பற்றி ஒரு தனிப் பகுதி இந்தப் புத்தகத்தில் உண்டு.

இந்தச் சட்டவரையறை நுட்பமானது. மதம் என்ற சிறையில் ஒருவரை தக்க வைக்க உருவாக்கப்பட்டது. இதில் பழங்குடி மக்கள் மட்டுமே விதி விலக்கு. அவர்கள் மதத்தால் அமைக்கப்பட்ட சமூகத்தினர் அல்ல. அவர்கள் சமூகத்தின் அடிப்படை பண்பாடு. எனவே மதத்தைக் காரணம் காட்டி அவர்கள் சலுகையைப் பறிக்க முடியாது. ஆனபோதும் அவர்களும்கூட மதம் மாறி தங்களுடைய பழங்குடியினர் பழக்க வழக்கங்களில் இருந்து (Traditional Customs) முற்றிலும் விடுபட்டுவிட்டால் பழங்குடியினரின் சலுகை கிடைக்காது என்று சொல்லப்படுகிறது.

இந்தத் தீர்ப்பானது, இந்துக்கள் மதம் மாறக் கூடாது என்பதைச் சொல்லும் விதத்தில்தான் அமைந்துள்ளது. ஏற்கனவே பிற மதங்களுக்கு மாறிய பட்டியல் சாதியினருக்கு இட ஒதுக்கீட்டுச் சலுகை கிடையாது என்று இதே உச்சநீதிமன்றம் கூறியுள்ளதன் தொடர்ச்சியாகவே இந்தத் தீர்ப்பும் இருக்கிறது. இந்தியாவில், முஸ்லீம் மக்கள் மிகவும் பின்னடைந்த நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் முஸ்லீம்களில் குறிப்பிட்ட சாதியினருக்கு, பின் தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தீர்ப்பை வழங்கும் முன் சச்சார் கமிட்டி பரிந்துரைகளை உச்சநீதிமன்றம் கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை. முற்பட்ட வகுப்பினருக்கு பொருளாதாரத்தில் பின் தங்கியவர் என்கிற அடிப்படையில் சலுகை கிடைக்கச் செய்த உச்சநீதிமன்றம், சமூக ரீதியாக பின் தங்கியுள்ளவர்களின் சலுகையை மதம் மாறியதைக் காட்டிப் பறிப்பது அநியாயம் ஆகும்.

தென் மாவட்டங்களில் பட்டியலின மக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினாலும் கூட சாதிய பாகுபாடு, ஒடுக்குமுறையினால் சாதியாதிக்கத் தாக்குதல்களுக்கும் படுகொலைக்கும் உள்ளாகிறார்கள். மதம் மாறினாலும் அவர்களுக்கு சமூகத்தில் சமத்துவம் கிடைக்காத நிலை உள்ள போது, அவர்கள் மதம் மாறுவதற்கு முன்பு பெற்று வந்த சலுகைகளைப் பறிப்பது அரசமைப்புச் சட்டப்படியான இட ஒதுக்கீட்டுக் கொள்கையையே சீர் குலைப்பதாகும். எனவே இந்தத் தீர்ப்பைச் சரி செய்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். இட ஒதுக்கீடு தொடர்பாக போடப்பட்டிருந்த 9.3.2024 தேதிய அரசாணை மீட்டெடுக்கப்பட வேண்டும். அதற்குரிய சட்ட நடவடிக்கைகளையும் சட்டத்திருத்தங்களையும் தவெக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

**– ஜி.ரமேஷ்**

## மோ–ஷா ஆட்சி அராஜகத்தைக் கண்டித்து












# டெல்லி போராட்டக் களத்தில்
















# மோ–ஷா ஆட்சியின் அறிவிக்கப்படாத அவசரநிலையும் இரண்டாம் கொடிப் போராட்டமும்

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் சௌரவ் தாஸ் மற்றும் அசுதோஸ் ரங்கா இருவரும் தேசியக் கொடியோடு ஜந்தர் மந்தர் சென்றார்கள் என்பதற்காக அவர்களைக் கைது செய்து ஐந்து நாள்கள் சிறையிலடைத்துவிட்டு உலகம் முழுவதும் நன்கு அறியப்பட்ட இந்தியாவின் போராட்டக் களமான டெல்லி ஜந்தர் மந்தரில் இனி போராட்டம் நடத்தக் கூடாது என்று மோ–ஷா அரசு அறிவித்தைத் தொடர்ந்து, களத்தைக் கைப்பற்றுவோம் எனவும் ஒவ்வொரு இடத்தையும் ஜந்தர்மந்தராக மாற்றுவோம் எனவும் அறிவித்தார்கள் நேஹாவும் அபிஜித்தும். அக்டோபர் 16ம் தேதி தேசியக் கொடியுடன் களம் காண அழைப்பு விடுக்கப்பட்டது. அக்டோபர் 10ம் தேதி டெல்லி மாநகரை கதவடைப்புக்குள்ளாக்கி, ஞானேஷ்குமாரை பதவி விலகச் சொல்லி நடத்திய போராட்டம் தோல்வி என்று தனக்குத்தானே பாராட்டிக் கொண்ட மோடி–ஷா அரசும் அதன் அதிகாரிகளும் மக்களின் கோபத்தால் மன்னிப்பு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ஞானேஷ் குமாரைக் காப்பாற்ற, தங்கள் வாக்குத் திருட்டு அம்பலமானதை மறைக்க, அமைதியாகப் போராடும் மாணவர்களையும் இளைஞர்களையும் போராட்டக் களத்திற்கு வரவிடாமல் செய்வதற்காக ரயில்களை, பேருந்துகளை எல்லாவற்றையையும் பாஜக அரசே முடக்கி 'பந்த்' நிலையை உருவாக்கியது.

அக்டோபர் 12 அன்று இந்தியா கூட்டணி நடத்திய உச்ச நீதிமன்றம் நோக்கிய பேரணி அதிர்வலையை ஏற்படுத்தியது. தோழர் நேஹா முன்னணித் தலைவர்களில் ஒருவரானார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திக்க மறுத்தார்கள். வழக்காடிகளை நீதிபதிகள் சந்திப்பது முறையல்ல என்றார்கள். ஆனால், ஞானேஷ் குமாரின் வாக்குத் திருட்டை மட்டும் உடனடியாக தடுத்து நிறுத்த முடியாது என்றார்கள். ஏற்கனவே வாக்களிக்க முடியாமல் போனவர்களைப் பார்த்து அடுத்த முறை வாக்களித்துக் கொள்ளுங்கள் என்றார்கள். இந்தியக் குடிமக்களின் வாக்குரிமை, ஜனநாயக உரிமையை மீட்டுத் தர வேண்டிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள், வாக்குத் திருட்டைச் செய்ய வைத்த, செய்த குற்றவாளிகளுக்குச் சாதகமாகப் பேசுகிறபோது, அவர்களிடம் நியாயம் கேட்க மக்களோடு மக்களாக எதிர்க்கட்சித் தலைவர்கள் வரத்தான் செய்வார்கள். அவர்களிடம் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்றார்கள். வழக்கில் பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள். அதன் விளைவுதான் அக்டோபர் 16ம் தேதி அறிவிக்கப்பட்ட தேசியக் கொடி பேரணி. தேசப் பற்று பற்றி, தேசிய உணர்வு பற்றியெல்லாம் மற்றவர்களுக்கு பாடம் எடுக்கும் சங்கிகளும் மோ–ஷாவின் காவல் துறையும் மூவர்ணக் கொடியைப் பிடித்தவர்களையெல்லாம் தடி கொண்டு தாக்கினார்கள். பெண்களை பெண் போலீஸாரே அவமானப்படுத்தினார்கள். ஒரு பெண்ணை ஒன்பது பேர் சேர்ந்து, தர தரவென்று இழுத்துச் சென்றார்கள். அமைதியாக கொடி பிடித்து எதிர்ப்பு தெரிவித்தவர்களை, பயங்கரவாதிகள் போல் சுற்றி வளைத்துப் பிடித்தார். பெண்களின் ஆடைகள் அவிழ்வது பற்றியெல்லாம் அவர்களுக்கு கவலையே இல்லாமல் மானபங்கப்படுத்தினார்கள். ஆர்எஸ்எஸ் சங்கிக் குண்டர்கள் காவலர் சீருடையில் வந்து தாக்குதல் நடத்தினார்கள். இதையெல்லாம் வேடிக்கை பார்த்தது உச்சநீதிமன்றம். 'எனக்கு உச்சநீதிமன்றத்தின் மீது நம்பிக்கையே போய்விட்டது' என்று மூத்த வழக்கறிஞர் கபில் சிபில் கூறினார்.

நேஹா, அபிஜித், பிரசாந்த் பூசன், பிரசாஷ் ராஜ், ஆயிஷே கோஸ் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினார்கள். அங்கு வந்த மோடி–ஷா மீடியாக்கள் நேஹாவிடம் வம்பிழுத்தார்கள். தோழர் நேஹா அசரவில்லை. திட்டமிட்டபடி ஜந்தர் மந்தரை மீட்டெடுக்க தேசியக் கொடியுடன் இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் ரவிராய், தோழர் நேஹா, தோழர் சாய் பாலாஜி உள்ளிட்ட தோழர்களுடன் இளைஞர், மாணவர், பெண்கள் பெரும் பேரணியாக தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்து வந்தார்கள். குழந்தைகளுடன் வந்திருந்த பெண்களைக் கூட பெண் போலீஸார் தர தரவென்று இழுத்துச் சென்றார்கள். ஒட்டு மொத்த காவல்துறையின் கண்ணும் தோழர் நேஹா மீது இருந்தது. அவரை முன்னேற விடாமல் செய்வதிலேயே குறியாக இருந்தார்கள். அவர்களின்

தடைகளையெல்லாம் தாண்டி நேஹா முன்னேறினார். ஆனால், மோ–ஷாவின் காவல்துறை அவரை சுற்றி வளைத்துக் கழுத்தை நெரித்துப் பிடித்து, குண்டுக் கட்டாக வலுக்கட்டாயமாக தூக்கிச் சென்று காருக்குள் திணித்தது. அவரை கடத்திச் சென்றார்கள். எங்கு கொண்டு செல்கிறார்கள் என்று யாருக்கும் சொல்லவில்லை. நேஹாவைப் பிடித்தது போலவே தோழர் அபிஜித்தையும் கைது செய்து கொண்டு சென்றார்கள். தோழர்கள் நேஹா, அபிஜித் மோ–ஷாவின் காவல்துறையால் கடத்தப்பட்டது




தெரிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கண்டனக் குரல் எழுப்பினார்கள். ராகுல் காந்தி, திரிணாமுல் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ் யாதவ், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தோழர் திபங்கர், தோழர் எம்.ஏ.பேபி, தோழர் ராஜா உள்ளிட்ட தலைவர்கள் அபிஜித், நேஹா எங்கே? உடனடியாக விடுதலை செய்யுங்கள் என குரல் கொடுத்தார்கள். முற்போக்கு ஜனநாயக சக்திகளும் பொது மக்களும் மாணவர், இளைஞர்களும் குரல் கொடுததார்கள். அதன் விளைவாக, மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்ட தோழர் நேஹாவை ஐந்து மணி நேரத்திற்குப் பின்னர் இரவு 10 வாக்கில் வழக்கறிஞர்களைச் சந்திக்க மட்டும் அனுமதித்தார்கள் டெல்லி காவல்துறையினர். நேஹாவிற்கு உடல் நிலை சரியில்லை, அவருக்கு மருந்துகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னதற்கு மறுத்துவிட்டுள்ளார்கள். ஒரு பெண்ணை மாலை 6 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் இருக்க வைக்கக் கூடாது என்று சட்டமும் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் இருப்பினும் எது பற்றியும் கவலைப் படாமல் இரவு முழுவதும் நேஹாவை காவல் நிலையத்தில் வைத்திருந்து விட்டு விடுவித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் இரண்டாம் சுதந்திரப் போராட்டம். இந்த நாட்டின் இறையாளுமையை, அரசமைப்புச் சட்டத்தை, ஜனநாயகத்தைக் காப்பதற்கான போராட்டம். இது தொடரும்.





# வரலாறு அழைக்கிறது

அபிஜீத் தீப்கேவுக்கு வாழ்த்துகள்
நேஹா போராவுக்கு வாழ்த்துகள்

அபிஜீத் தீப்கே – நேஹா போரா
யாராலும் இதற்கு முன்
அறியப்படாத இரண்டு பெயர்கள்
இப்போது நாடு முழுக்க ஒலிக்கிறது

எவராலும் அறியப்படாத
அந்த இரண்டு முகங்கள்
இலட்சோப இலட்சம்
இளைஞர்கள் இதயங்களில்
ஒரு விளக்கைப்போல ஒளிர்கிறது

இந்தியா நீண்ட காலமாக
இருட்டில் நின்றுகொண்டிருக்கிறது

வரலாறு அழைக்கிறது;
இவர்களோடு நில்லுங்கள்
என இடிமுழக்கம் கேட்கிறது

அரசியல் கணக்குகள்
இப்போதுவேண்டாம்
அழிவின் அரசியலை அழிக்கும்
ஆழிப்பேரலை ஒன்று
எழுந்து வருகிறது

சதிக்கோட்பாடுகள்
இப்போது வேண்டாம்
சதிகாரர்களின் தன்னம்பிக்கையை
அசைக்கும் பூகம்பமொன்று
அதிர்ந்து கொண்டிருக்கிறது

அவநம்பிக்கையின் நிழல்கள்
இப்போது விழவேண்டாம்
அசைக்கமுடியாதென்று சொல்லப்பட்ட
அதிகாரத்தின் இரும்புக் கோட்டைகள்
இளம் வெயில் பட்டு
உருகத் தொடங்கியிருக்கிறது

ஆயிரம் ஆயிரம்
இளம் முகங்களில்
ஆயிரம் ஆயிரம் சூரியன்கள்
அச்சமற்றுத் தகிக்கின்றன

நாம் நீண்டகாலமாக
தோற்றுவிட்டோம்
நாம் நீண்ட காலமாக
களைப்படைந்துவிட்டோம்
ஒரு தலைமுறையின்
தோல்வியின் நோய்மையிலிருந்து
எழுந்துவாருங்கள்
என அழைக்கிறது
புதியதொரு காலத்தின் குரல்

தயங்கி நிற்பவர்களை
வரலாறு மதிக்காது
இந்த எழுச்சியை
எதிர்த்து நிற்பவர்களை
வரலாறு மன்னிக்காது

காக்கியின் நிறங்கள்
காவியின் நிறங்கள்
நம் புதிய நதிகளில்
கழுவப்படுகின்றன

திருடர்களின்
சகுனத் திசைகளில்
தீய அறிகுறிகள் தொடங்கிவிட்டன

அபிஜீத் தீப்கேவுக்கு வாழ்த்துகள்
நேஹா போராவுக்கு வாழ்த்துகள்

வரலாறு அழைக்கிறது;
இவர்களோடு நில்லுங்கள்
என இடிமுழக்கம் கேட்கிறது

**5.10.2026**
**மனுஷ்ய புத்திரன்**
**(முகநூல் பதிவிலிருந்து)**




## இந்தியா டுடே தொகுப்பாளர்:

நேஹா போரா, இனி உங்கள் பயணம் எப்படி இருக்கப்போகிறது?

நீங்கள் ஒரு முதன்மை நீரோட்ட அரசியல்வாதியாக மாறப்போகிறீர்களா?

கன்ஹையா குமாரைப் பார்த்தோம் அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து (CPI) விலகி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

நீங்களும் காங்கிரஸ் கட்சியில் இணைந்து ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி வதேராவுடன் பயணிக்கப் போகிறீர்களா?

அல்லது, சிறிய அமைப்பான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிய-லெனினிஸ்ட்) CPI(ML)- லேயே தொடர்ந்து செயல்படப் போகிறீர்களா?

## நேஹா:




“'முதன்மை நீரோட்ட அரசியல்' (mainstream politics) என்று சொல்லும்போது, நாம் மீண்டும் மீண்டும் பெரிய, பாரம்பரியமான கட்சிகளை மட்டுமே நினைக்கிறோம்.

ஆனால், நான் இன்று உங்கள் நிகழ்ச்சியில் அமர்ந்திருப்பதும், அந்தப் பேரணியில் பங்கேற்றதும், முதன்மை நீரோட்ட அரசியல் என்பதற்கான வரையறையே மாறிவிட்டதைக் காட்டுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் இயக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் மாணவர்களும் சாதாரண மக்களுமே, இன்று தேசிய அரசியலை வரையறுக்கிறார்கள்.

அப்படியிருக்க, அவர்கள் ஏன் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சிகளையோ அல்லது அரசியல் நிலைப்பாடுகளையோ மாற்றிக்கொள்ள வேண்டும்?

அவர்களின் பணி அணி மாறுவது அல்ல மாறாக, தாங்கள் சார்ந்திருக்கும் தரப்பை மேலும் வலுப்படுத்துவதுதான்.

இதுதான் எனது கருத்து.”



# நேஹா

## (AISA) - CPI(ML) LIBERATION

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17

# இந்தியா கூட்டணி போர் முழக்கம்






Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai -** 600002. **Editor G.Ramesh**